திருக்கோயில்

அக்டோபர் 1986 விலை ரூ 2-00



சிதம்பரத்தில் நடைபெற்ற தெய்வச் சேக்கிழார் விழா

தெய்வச்சேக்கிழார் பெருமான் பெரியபுராணம் இயற்றிய தில்லை சபாநாயகர் ஆலயத்தில் தெய்வச்சேக்கிழார் திரு





நாள் விழா மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்களின் முன்னிலையில் ஜூலை 5, 6 தேதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் நிகழ்ச்சியை தருமையாதீனம் சீலத்திரு சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் துவக்கி வைத்தார்கள். டாக்டர் சொ. சிங்காரவேலன் அவர்களின் தலைமையில் நடைபெற்றகவியரங்கில் கவிஞர்கள் டாக்டர் த. அமிர்தலிங்கம், திரு ம. வே. பசுபதி, திருமதி தங்க அன்புவல்லி ஆகியோர் பங்கேற்றனர். துணை ஆணையர் திரு நா. சீனிவாசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

முகப்பு

தேவியர் மூவர்
கலைமகள், மலைமகள், அலைமகள்
அருள் பாலிக்கும் திருக்காட்சி

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை,
சென்னை-600 034.

தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்: கவிஞர் டாக்டர்
த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை : 28 | திருவள்ளுவர் ஆண்டு 2017 அட்சய ஆண்டு ஐப்பசித் திங்கள் அக்டோபர் 1986 விலை ரூ. 2-00 | மணி : 10

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

திருக்கோயில் திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்

உயர்திரு
ஆணையர் அவர்கள்
அறநிலைய ஆட்சித்துறை
சென்னை-600 034

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா ரூ 24.00 மட்டும்.

புதிய சந்தாதாரர்கள் ஒரு ஆண்டிற்கு ரூ. 24/- எனக் கணக்கிட்டு எத்தனை ஆண்டுகளுக்குச் சந்தா கட்ட விரும்பினாலும் அத்தனை ஆண்டுகளுக்குப் பணம் அனுப்பிவைக்கலாம். அவர்கள் எப்பொழுது பணம் அனுப்பினாலும் பணம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்தத் திங்களிலிருந்து அவர்கள் அனுப்பிய காலம் முடிய ''திருக்கோயில்'' இதழ் அனுப்பிவைக்கப்படும் என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும் பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில் புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin code) எண்ணுடன் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

திருவையாறு அருள்மிகு பஞ்சநதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற ஆலய மேம்பாட்டுத் திட்ட நிதி வழங்கும் விழாவில் 1300 நலிவுற்ற ஆலயங்களுக்கு நிதி வழங்கி மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் ஆற்றிய சிறப்புரை.

சென்னையில் நடைபெற்ற ஆலய மேம்பாட்டுத் திட்ட நிதி வழங்கும் விழா
—செவ்வேள்

சோழப் பெருவானத்துச் சோதி நிலா
—புலவர் நடேச நாராயணன்

ஆசைதீரக் கொடுப்பவர்
—கி. ஸ்ரீதரன்

விவேகானந்தரின் சிந்தனைகள்
—டாக்டர் மின்னூர் சீனிவாசன்

எண்வகை யோகம்
—டாக்டர் பொற்கோ

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஆற்றிவரும் சமுதாயப் பணிகள்
—க. பொன்னுசாமி, பி.எஸ்சி.,

அநபாயச் சோழனின் இதயக்கனி
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

வாசகர் எண்ணங்கள்

திருவையாறு அருள்மிகு பஞ்சநதீஸ்வரர் ஆலயத்தில் 12-8-86 அன்று மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் 1300 நலிவுற்ற ஆலயங்களுக்கு ஒரு வேளை பூசை நிதியாக தலா ரூ. 5,000 வழங்கி ஆற்றிய சிறப்புரை :-

மாண்புமிகு நீதிபதி திரு கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களே! ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கின்ற வணக்கத்திற்குரிய சான்றோர்களே! அரசுச் செயலர் அவர்களே! ஆணையர் அவர்களே, அருமைச் சகோதரர் துரை கோவிந்தராஜன் அவர்களே! வருகை தந்திருக்கின்ற பெரியோர்களே, நண்பர்களே.

மிகச் சிறந்த நிகழ்ச்சி

தமிழகத்தினுடைய அறநிலையத்துறை வரலாற்றில் ஒரு மிகச் சிறந்த நிகழ்ச்சியை புகழ்மிக்க தஞ்சை மண்ணிலே, திருவையாற்றிலே நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த நிகழ்ச்சியைப்பற்றி எனக்கு முன்னாலே ஆசி

திருவையாறு அருள்மிகு பஞ்சநதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற 1300 ஆலயங்களுக்குப் பூசைநிதி வழங்கும் விழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்களும் ஆன்றோர் பெருமக்களும் வீற்றிருக்கும் காட்சி.

யுரை வழங்கிய சான்றோர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும், அரசையும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டி இருக்கிறார்கள். நான் அதற்காக என்னுடைய நன்றியை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எத்தனையோ விஷயங்களைப் பேசவேண்டுமென்று என்னுடைய உள்ளத்திலே கருத்துக்கள் அலைமோதிக் கொண்டு வந்து கொண்டிருந்தாலும், இன்னும் சில நிமிடங்களுக்குள்ளே நான் இங்கிருந்து புறப்பட்டால்தான் திருச்சியில் பாண்டியன் துரித ரயிலை நான் பிடிக்க முடியும். நாளைக்குச் சென்னையில் மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்களைச் சந்தித்துவிட்டு, நாளையே புறப்பட்டு நெல்லை தேர்தல் களத்திற்குச் சென்றாக வேண்டும்.

நான் சொல்ல வேண்டுமென்று விரும்புகிற கருத்துக்களை 18 ஆம் தேதி தென்காசியிலே புகழ்மிக்க இராஜகோபுரத் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்கு மூன்றாவது நிலையினுடைய தொடக்க விழா மிகச் சிறப்பாக நடை பெற இருக்கிறது. 85 லட்ச ரூபாய் செலவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அந்த திருப்பணியினுடைய மூன்றாவது நிலை தொடக்கவிழாவில் சான்றோர்கள் எல்லாம் அங்கே கலந்து கொள்ள இருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய கருத்துக்களை அங்கே நான் எடுத்து வைக்க எனக்கு நேரம் கிடைக்கும் என்று கருதி நான் எந்தக் கருத்தையும் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்பவில்லை.

அறநிலையத்துறையும் அரசும் தயாராக இருக்கிறது

ஆனால் ஒன்றை மாத்திரம் இங்கே வீற்றிருக்கின்ற வணக்கத்திற்குரிய சான்றோர்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். கடந்த எட்டாண்டு காலத்தில் தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பிலே புரட்சித் தலைவர் அவர்கள் இருக்கின்ற இந்தக் காலத்தில் அறநிலையத்துறையின் மூலம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பணிகள் மிகசிறப்பாக இருக்கின்றன என்று நீங்கள் எண்ணுவீர்களேயானால் மேலும் இதைத் சிறப்பாக ஆக்குவதற்கும், பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு புதிய பொற்காலத்தை உருவாக்குவதற்கும் நீங்கள் துணை நிற்க வேண்டும் என்று மாத்திரம் நான் இந்த நேரத்திலே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அருள்கூர்ந்து ஆன்மீகத்துறையில் ஆலய மேம்பாட்டு திட்டங்களைச் சார்ந்த பணிகளை யாரிடத்திலோ கொண்டுபோய் ஒப்படைக்கின்ற அந்த முயற்சிக்கு தெரிந்தோ, தெரியாமலோ நம்முடைய வணக்கத்திற்குரிய சான்றோர்கள் துணை போய் விடக்கூடாது என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள் ஆகும். நான் இதற்கான விளக்கங்களைப் பொதுக் கூட்டத்திலே - மக்கள் மன்றத்திலே பேச விரும்பவில்லை.

அவர்கள் என்னிடத்திலே எப்பொழுதும் அன்புகொண்டிருக்கிறவர்கள். எந்தக் கருத்துக்களையும் எடுத்துச் சொல்லுகிறவர்கள். தவத்திரு சுந்தர சுவாமிகள், தவத்திரு சாந்தலிங்க அடிகள் போன்றவர்கள், எந்த நேரத்திலும் அவர்கள் விரும்புகிற கருத்துக்களை எடுத்துச் சொல்லவும், அதைக் கேட்டு அதன்படி நடக்கவும் நிறைவேற்றவும் நாங்கள் முயன்று கொண்டிருக்கிறவர்கள் என்பதை அவர்களே தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, ஆலய மேம்பாட்டுத் திட்டம், அறநிலையத்துறையினுடைய வளர்ச்சி, ஆன்மீக வளர்ச்சி இன்றைக்கு எப்படி சமுதாயத்திலே உருப்பெற்று வருகிறது என்பதை அருள் கூர்ந்து நீங்கள் எண்ணிப் பார்த்து, நீங்கள் பாராட்டுகின்ற அந்த உணர்வுகளோடு எங்களிடத்திலே கலந்து பேசி, உங்களுடைய கருத்துக்களை நாங்கள் கேட்டு மேலும், இதைச் சீர்திருத்துவதற்கும், சிறப்பாக நடத்துவதற்கும், வழிவகை காணவேண்டும் அதற்கு அறநிலையத்துறையும், அரசும் தயாராக இருக்கிறது.

பச்த்தோல் போர்த்திய புலிகள்

எந்த நேரத்திலேயும் உங்களுடைய கருத்துக்களைக் கேட்டு நடக்க நாங்கள் காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே சொல்லி, இங்கே கூட என்னிடத்திலே ஒரு துண்டு பிரசுரத்தைத் தந்திருக்கிறார்கள். 31 ஆம் தேதி அடையாள உண்ணாவிரத அறப்போர். அதைக் குறிப்பிட்டுத்தான் மாண்புமிகு நீதிபதி அவர்கள் இங்கே பேசினார்கள்.

அரசியல் கருத்துடையவர்கள், அல்லது வேறு காரணங்களுக்காக பசுத்தோல் போர்த்திய புலிகளாக உலவிக் கொண்டிருக்கிறவர்கள் எந்தக் காரியத்தை நடத்தினாலும் நாங்கள் அஞ்சப்போவதுமில்லை. கவலைப்படப்போவதுமில்லை. அதற்காக நாங்கள் வருத்தப்படப் போவதுமில்லை.

ஆனால் நாங்கள் மதிக்கின்ற, போற்றுகின்ற வணக்கத்திற்குரியவர்கள் என்று கருதுகின்ற நம்முடைய சான்றோர்கள் சிலரை முன்னாலே நிறுத்தி இப்பணிகள் நடைபெறுகின்றதே! அது இந்தக் காலத்திலே நடைபெறுகின்றதே! நீங்கள் எல்லாம் என்னை இவ்வளவு நேரம் பாராட்டினீர்கள், புரட்சித் தலைவரைப் பாராட்டினீர்கள், அப்படியானால் இந்தப் பாராட்டுக்கு ஏதாவது பொருள் இருக்கிறதா என்று தான் எங்கள் மனம் எண்ணிபுண்பட்டுக் கொண்டிருக்கிறது.

அடையாளம் காட்டமுடியும்

நான் இந்த அறப்போர் அல்லது அடையாள உண்ணாவிரதப் போர் இதைப்பற்றிக்

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம் வீ அவர்கள் 1300 ஆலயங்களுக்கு பூசைநிதி வழங்கிச் சிறப்புரை ஆற்றுகிறார்.

கருத்து தெரிவிக்க விரும்பவில்லை. இதன் மூலம் என்ன நடைபெற முடியும், என்ன நடைபெறும் என்று இதற்குப் பின்னாலே இருந்து தூண்டிவிடுகிறவர்கள் எண்ணுகிறார்கள் என்பதை நாங்கள் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் உங்களுக்கு அது புரியுமா புரியாதா? எனக்குத் தெரியவில்லை.

நான் இதில் இருக்கிற வாசகங்களைப் படித்தால், இந்த நாட்டுமக்களுடைய உணர்வுகளை நாங்களும் தூண்டிவிட முடியும். இதற்குக் காரணமாக இருக்கின்ற அந்தப் பசுத்தோல் போர்த்தியவர்களை அடையாளம் காட்ட முடியும். அதற்கு இப்பொழுது முன்வர நாங்கள் விரும்பவில்லை. எனக்கு இருக்கின்ற கவலை எல்லாம் நாங்கள் மதிக்கின்ற வணங்குகின்ற சான்றோர்கள், அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு ஒரு பிரிவினர் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

நீங்கள் இங்கே பாராட்டினீர்களே, அதற்கெல்லாம் மாறாக இந்தத் துண்டுப் பிரசுரம் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. அது உங்களுடைய துணையோடு என்று அவர்கள் எச்சரிக்கிறார்கள். இதற்கு நீங்களும் துணையாக இருக்கிறீர்கள் என்று தெரிவிக்கிறார்கள். நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எல்லாம் அறத்திற்கு - சத்தியத்திற்கு - அறநிலையத்துறைக்கு அரசுக்குத் துணையாக இருந்து இந்தப் பொற்காலத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

ஆனால் அவர்கள் எதைக் காரணமாகவோ மனதிலே வைத்துக் கொண்டு நீங்கள் துணையாக இருக்கிறீர்கள் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது மாத்திரம் உங்களுடைய சிந்தனைக்கு நான் வைக்கிறேன்.

புரட்சித்தலைவர் அதை மாற்றிக் கொண்டிருக்கிறார்

வணக்கத்திற்குரிய திருப்பனந்தாள் காசி மடஅதிபர் அவர்கள் பேசுகிறபொழுது அந்தக் காலத்திலேயே-7ஆம் நூற்றாண்டிலேயே அர்ச்சகர்கள் கஷ்டப்பட்டார்கள், ஆலயங்கள் வழிபாடில்லாமல் நின்றது என்ற ஓர் கருத்தைச் சொன்னார்கள். வணக்கத்திற்குரிய சான்றோர்களே, அதுதான் ஐயா வரலாறு.

2 ஆம் நூற்றாண்டிலே இருந்து 7-ஆம் நூற்றாண்டுவரை இந்த நாட்டினுடைய இருண்ட காலம் என்று வரலாற்றாசிரியர்கள் வருணிக்கிறார்களே! அன்றைக்குத் தமிழ்ச் சமுதாயம், தமிழர்க்கு உள்ள பண்பை, சமய உணர்வுகளை இழந்த ஒரு 500 ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றினார்கள் தமிழ்ச் சமுதாயத்தினுடைய

தலைவர்கள் திருநாவுக்கரசர் என்ற அப்பர் பெருமானும், திருஞானசம்பந்தரும், சுந்தர மூர்த்தி நாயனாரும், ஆகவேதான் அவர்கள் அந்த அளவிற்குப் பாடினார்கள்.

அன்றைக்கு ஆலயங்களிலே பூசை இல்லை. அர்ச்சகர்கள் பசியால் வாடினார்கள், பட்டினி கிடந்தார்கள். அந்த நிலை புரட்சித் தலைவர் காலத்திலே இருக்கக் கூடாது என்று தான் இன்றைக்குப் புரட்சித் தலைவர் இதை மாற்றிக் கொண்டிருக்கிறார்.

அப்பொழுது அதைப் போக்க யார் வந்தார்கள்?

65 லட்ச ரூபாய் 1300 ஆலயங்களுக்கு; பத்து லட்ச ரூபாய் இங்கே ஆயிரக்கணக்கான அர்ச்சகர்களுக்கு - 406 ஆலங்களில் பணியாற்றுகின்ற 1603 ஆலய அலுவலர்களுக்கு. ஆகவே, 7-ஆம் நூற்றாண்டிலே தொடங்கப்பட்ட பணி, அப்பர் பெருமானாலே, திருஞானசம்பந்தராலே தொடங்கப்பட்ட பணி, இன்றைக்கு இருபதாம் நூற்றாண்டினுடைய இறுதிக் காலத்திலே புரட்சித் தலைவராலே தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

அருள்கூர்ந்து சிந்தியுங்கள். உங்களுடைய பாதங்களைத் தொட்டு நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்காக அல்ல. இந்தச் சமுதாயம் இழந்து விட்ட வரலாற்றை, ஆன்மீக உணர்வுகளை மீண்டும் தைரியமாக ஒரு அரசின் சார்பிலே கொண்டு வந்த அரசு, புரட்சித் தலைவருடைய அரசா இல்லையா என்பதை நீங்கள் மனதிலே கொஞ்சம் எண்ணிப் பாருங்கள்.

60 ஆண்டுகளுக்கு முன்னாலேயும், ஆலயங்களுக்குப்பூசை இல்லாத நிலை இருந்தது. இதைத் தவத்திரு ஊரனடிகள் அவர்கள் சொன்னார்களே! அப்பொழுது அதைப் போக்க யார் முன் வந்தார்கள்? ஆலயத்திற்குச் சென்று வணங்குகின்றவர்கள் அவர்கள் என்று சொல்லுகிறீர்களே! நாங்கள் நாத்திகர்கள் என்று சொல்லுகிறீர்களே!

அன்றைக்குத் தோன்றியதா? அன்றைக்கு இந்த ஆலயங்கள் எல்லாம் பூசையில்லாமல் இல்லையா? மூடிக்கிடக்கவில்லையா? அர்ச்சகர்கள் வறுமையிலே வாடவில்லையா? அன்றைக்கு யாருடைய கண்ணிலேயும் படவில்லை. இன்றைக்கு நாங்கள் அவர்களை உங்கள் மன்றத்தின் முன்னாலே கொண்டு வந்து நிறுத்துகிறோம்.

அப்படிப்பட்ட 7-ஆம் நூற்றாண்டிலே தோன்றிய மறுமலர்ச்சி, 7-ஆம் நூற்றாண்டிலே தமிழகத்திலே தோன்றிய புரட்சி, இன்றைக்கும் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே தோன்றிக்கொண்டிருக்கிறது. அருள் கூர்ந்து புரிந்து கொள்ளுங்கள்.

கசாப்புக்காரர்களை நம்பி ஆடுகள் போகலாமா?

இந்தப் போராட்டத்திற்குக் காரணமாக இருக்கிற சில தலைவர்களை நான் சந்தித்தேன். அவர்களுக்கு இந்த 7 கோடி ரூபாய் வைப்பு நிதி வைத்திருக்கின்ற விவரமே தெரியவில்லை. 7 கோடி ரூபாயிலே இத்தனை ஆலயங்களுக்கு நிதி ஒதுக்குகிறோமே! அதுவே தெரியவில்லை. இப்படியும் நடக்கிறதா என்று கேட்கிறார்கள்.

கசாப்புக்காரர்களை நம்பி ஆடுகள் போகிறதுஎன்று ஒரு கதை சொல்லுவார்களே, இது நடக்கலாமா. என்பதை மாத்திரம் ஞானிகளே சான்றோர்களே உங்கள் பாதத்தைத் தொட்டு நான் கேட்கிறேன். அதற்குப் பிறகு உங்களுடைய தெளிவான பதிலைக் கேட்டு நாங்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நான் முடிவெடுக்கிறேன். முதல்வர் அவர்களிடத்திலேயும் தெரிவிக்கிறேன். வேறு எந்த விவரத்தையும் எந்த விவாதத்தையும் நான் இந்த மேடையிலே நடத்த விரும்பவில்லை.

இங்கே சில நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்டார்கள். வணக்கத்திற்குரிய காசி மடம் அதிபர் அவர்கள் சொன்ன ஆலயங்களுடைய திருப்பணி உடனடியாகத் தொடங்கப்படும். அதை அவர்களே முன்னின்று நடத்தலாம். அதற்கான நிதி உதவி வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எல்லோரும் சேர்ந்து செய்வோம்

அது மாத்திரமல்ல, தஞ்சை மாவட்டத்திலே எந்த ஆலயங்கள், தயவுசெய்து பட்டியலைத் தாருங்கள், அரசாலே என்ன முடியும். அறநிலையத் துறையாலே என்ன முடியும், நாம் அதைச் செய்வோம். எல்லோரும் சேர்ந்து செய்வோம். நீங்களே சொன்னீர்கள், எங்களாலே முடியவில்லை; முடிந்ததைச் செய்கிறோம் என்று.

அரசு மாத்திரம் என்ன ஆண்டவனின் மறு உருவமா? மக்களாலே - மனிதர்களாலே நடத்தப்படுகிற அரசுதானே! மக்களுடைய பிரதிநிதிகள் நடத்துகின்ற அரசுதானே. நாங்கள் மாத்திரம் என்ன மந்திரத்தாலே மாங்காயை விழவைக்க முடியும் என்று கருதுகிறீர்களா? தயவுசெய்து உங்களாலே முடியவில்லை என்று சொல்லுவதைப் போலத்தான் அரசாலும் முடியவில்லை.

ஆனால்அரசாலே முடிந்த காரியத்தையும், இதுவரையாரும் செய்ய முன்வரவில்லை. புரட்சித்தலைவர் ஆட்சிலே அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைத்தான் ஊரனடிகள் இங்கே பாராட்டினார்கள். தவத்திரு காத்தையா சுவாமிகள் பாராட்டினார்கள். நீங்களும் பாராட்டினீர்கள். ஆனால் இந்தப் பாராட்டுக்களை எல்லாம் மறைக்க வேண்டுமென்று, அழிவுப்பாதையை நோக்கி

ஆன்மீகத் துறையைச் செலுத்த வேண்டுமென்று, போராட்டக் களத்தை உருவாக்க வேண்டுமென்று, ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ள வேண்டும் என்ற உணர்வோடு, சிலர் திட்டத்தைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நீங்கள் உங்களையும் அறியாமல் அருள்கூர்ந்து துணைபோய்விடாதீர்கள்.

மேலும் பல திட்டங்கள்

அதைமாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்து இங்கே தஞ்சைப் பெரிய கோயிலைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். 5 லட்ச ரூபாய் அறநிலையத்துறையினுடைய இந்த நிதியிலே இருந்து வைப்பு நிதியாக வைக்கப்படும். அதிலிருந்து வருகின்ற வட்டியை பெரிய கோயிலினுடைய பூசை எந்தக் காலத்திலும் நிற்காமல் நடத்துகின்ற அந்தப் பாதுகாப்பிற்காக 5 லட்ச ரூபாய் வைக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

சேக்கிழார் பெருமானைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். நாயன்மார்களை எல்லாம் பாராட்டுகிறீர்கள். அப்பரைப் புகழ்கிறீர்கள். இவர்களை எல்லாம் அடையாளம் காட்டியவர் சேக்கிழார் பெருமான். இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர். அவர் அடியார்களைப் பாடினார். அடையாளம் காட்டினார்.

2 ஆண்டுகளாக இந்த ஒன்றுமறியாத அப்பாவி ஆர்.எம்.வீரப்பன் அல்லவா வந்து சேக்கிழார் பெருமானுக்கு விழா எடுக்க வேண்டும் என்று உங்களை எல்லாம் அழைத்து இன்றைக்குக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அதற்கு திட்டம் உருவாக்கியிருக்கிறோம்.

5 லட்ச ரூபாய் வைப்பு நிதியாக வைத்து, அதிலே இருந்து வருகிற வட்டியை எந்த ஆண்டிலும் நிறுத்தாமல் அந்தச் சேக்கிழார் பெருமானுடைய விழா ஆண்டு தோறும் நடத்தப்படும். அதற்காக ஒரு 5 லட்ச ரூபாய் வைப்பு நிதியாக வைக்கப்படுகிறது.

சிதம்பரத்திலே ''தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று பாடினாரே! அந்த தில்லை வாழ் அந்தணர்கள் இன்றைக்குச்சீரழிந்துகொண்டு இருக்கிறார்கள். வாழ்விழந்து கொண்டிருக்கிறார்கள். தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாமல் வறுமையிலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்காக 2 லட்ச ரூபாய் வைப்பு நிதி ஒதுக்கி, அதிலிருந்து வருகிற அந்த வட்டியிலே அந்த தீட்சிதர்களுடைய பிள்ளைகள் படிப்புக்காக அரசு உதவ இருக்கிறது. அறநிலையத்துறை உதவ இருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

புரட்சித்தலைவரை விட்டால்....

இப்படி எத்தனையோ திட்டங்கள் செய்வதற்கு நாங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு நீதிபதி அவர்கள் 4 ஆண்டுகளுக்கு முன்னாலே சொன்னார்கள். அந்த சிந்தனைதான் இந்த 7 கோடி மேம்பாட்டுத் திட்டம்.

ஆகவே, அருள்கூர்ந்து, நீங்கள் இந்த அரசை விட்டால், புரட்சித் தலைவரை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், இன்னும் ஒரு இருண்ட காலத்தை நோக்கித் தமிழகத்தை இழுத்துச் செல்கிறீர்கள் என்பது பொருளே தவிர ஒளிமிக்க காலத்திற்கு நாம் போகவில்லை என்பதை நான் உங்கள் பாதத்தைத் தொட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் நான் சொல்ல வேண்டிய செய்திகளை உங்களிடத்திலே நேரிலே தெரிவிக்கிறேன். நீங்கள் தெரிவிக்க வேண்டிய செய்திகளை எங்களிடத்திலே தெரிவித்து எங்களை வேலை வாங்கிக் கொள்ளுங்கள்.

எங்களை விட்டால் உங்களுக்கு இந்த நூற்றாண்டிலே யாரும் கிடைக்கமாட்டார்கள் என்பதை மாத்திரம் சொல்லி, விஷமிகளுக்கு, வன்முறையைத்தூண்டுகிறவர்களுக்கு, குழப்பம் விளைவிப்பவர்களுக்கு, அமைதியாகத் தமிழகம் இருக்கக் கூடாது என்று எண்ணுகிறவர்களுக்கு அருள்கூர்ந்து இடமளித்து விடாதீர்கள் என்று திருவையாற்றிலே புகழ்மிக்க இந்த ஆண்டவன் சந்நிதியிலே உங்களை வேண்டிக் கேட்டு விடைபெற்றுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

முருகன் துணை

கண்இமை போலநீ எந்தன் உறவு
கந்தா முருகா கடம்பா சண்முகா (கண்)

எண்ணம் முழுவதும் உந்தன் நினைவு
எல்லாம் உன்பேர ருளின் விளைவு (கண்)

நடப்பதை முன்னின்று நீ நடத்துவாய்
நலம்பல வாழ்வில் நீ செய்யத் துடிப்பாய்
இடர்வந்தால் வேலை விரைவினில் அனுப்புவாய்
ஈரேழு உலகம் முழுதும் நீ வாழ்விப்பாய் (கண்)

கவிஞர் வ. நித்தியானந்தம்

ஆலயங்களில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா

நம் இந்திய நாட்டின் சுதந்திரத்திருநாளான ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் அன்று நம்முடைய அறநிலையத்துறையின் ஆட்சிக்கு உட்பட்ட சுமார் 5000ஆலயங்களில் பத்து லட்சம் மக்கள் பங்கு கொண்ட சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டன.

சங்ககாலத்திற்கு முன் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருமூலர் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என உரைத்துள்ளார். சங்க காலத்தைச் சார்ந்த வள்ளுவரும், கணியூன் பூங்குன்றனாரும் ''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என அறிவுறுத்தியுள்ளனர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய திருநாவுக்கரசரும் ''சாத்திரம் பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்'' என சாதிபேதங்களைக் கடிந்துள்ளார்.

இந்நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய அமரர் மகாகவி பாரதியாரும் ''எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' எனப் பாடியுள்ளார்.

ஆன்றோர்கள், சான்றோர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகச் சாதியொழிப்பை வற்புறுத்தியும், நம்மிடையே சாதி முற்றும் ஒழியவில்லை. சமத்துவமும் வளரவில்லை.

நம்மால் வணங்கப்படும் முருகப்பெருமான், வள்ளியைக் காதல் கலப்பு மணம் புரிந்து சாதியை மறுத்தவரே. நம்மால் போற்றப்படும் கண்ண பெருமானும் இடையர் இனத்தவரோடு தாமும் இடையராக வளர்ந்து சமத்துவத்தை வளர்த்தவரே.

ஆகவே ஆண்டவனுடைய ஆட்சியில் சாதிக்கு இடமே இல்லை. நாம் எல்லாம் சரிநிகர் சமானமானவர்கள்.

இவ்வுண்மையை வற்புறுத்தவே ஆண்டு தோறும் ஆலயங்களில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா நிகழ்ச்சிகளைச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறது போற்றுதலுக்கு உரிய நம்முடைய அறநிலைய ஆட்சித் துறை.



அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி ஆலயத்தில் நடைபெற்ற பொது விருந்து விழாவில் மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் திருமிகு ந. நல்லுசாமி பி.ஏ.,பி.எல். அவர்கள் கலந்து கொண்டு, வயதான மூதாட்டியுடன் அளவளாவி மகிழ்கிறார். அருகில் அமர்ந்து இருப்பவர் அமைச்சரின் துணைவியார்.



அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பொது விருந்து நிகழ்ச்சியில் ஆணையர் திரு க. சுந்தரமூர்த்தி ஐ.ஏ.எஸ். அவர்கள் கலந்து கொண்டார். தவத்திரு சுவாமி இராமதாசர், துணை ஆணையர் திரு. தீனதயாளு ஆகியோர் உடன் உள்ளனர்.

சென்னையில் நடைபெற்ற ஆலய மேம்பாட்டுத் திட்ட நிதி வழங்கும் விழா

'செவ்வேள்'

நம்முடைய இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆலயங்களின் மேம்பாட்டிற்கென ஏழு கோடி ரூபாய் வைப்புநிதித் திட்டத்தை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவது யாவரும் அறிந்ததே.

நலிவுற்ற ஆலயங்களின் ஒருவேளை பூசைக்காக ஐந்து கோடி ரூபாய்களும், கிராமக் கோயில்களின் திருப்பணிக்காக ஒரு கோடி ரூபாய்களும், ஆலயப் பணியாளர்களின் நலனுக்காக ஒரு கோடி ரூபாய்களும் ஆக மொத்தம் ஏழு கோடி ரூபாய்கள் நிலையான வைப்புத் தொகையாக வங்கிகளில் வைக்கப்பட்டு அவற்றின் வட்டியிலிருந்து மேற்குறித்த மூன்று திட்டங்களையும் செயல்படுத்தும் ஆலய மேம்பாட்டுத் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அறிவுரைக்கிணங்க மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்களால் 15.8.84 ஆம் நாளன்று சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் அறிவிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஆலய மேம்பாட்டுத் திட்டத்தின் செயல்முறை துவக்கவிழா 20.7.85 அன்று தஞ்சை, அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 32 திருக்கோயில்களுக்கு ஒருவேளை பூசை நிதியாகத் தலா ரூ. 5,000-மும், ஆலயப் பணியாளர்கள் 930 பேருக்குச் சம்பள நிலுவையாக இருந்த 5,64,856 ரூபாய்களும் வழங்கித் திட்டத்தைத் தொடக்கி வைத்தார்கள்.

இதே ஆலய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 13.3.86 அன்று சென்னை, வடபழநியாண்டவர் ஆலயத்தில் நடைபெற்ற விழாவில் 150 கிராமக் கோயில்களின் திருப்பணிக்காக மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலா ரூ. 10,000- வீதம் மொத்தம் 15 லட்சம் வழங்கினார்கள்.

12.8.86 அன்று தஞ்சை மாவட்டம், திருவையாற்றில் நடைபெற்ற விழாவில் 1300 ஆலயங்களுக்குத் தலா ரூ. 5,000- வீதம் ஒரு வேளை பூசை நிதியாக ரூ. 65 லட்சத்தை மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துணை ஆணையர்களிடம் வழங்கி ஆலய நிர்வாகிகளுக்கு அத்தொகையை துணை ஆணையர்களே நேரடியாக வழங்கக் கேட்டுக்கொண்டார்கள்.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சரின் ஆணைக்கிணங்க சென்னை, செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டங்களில் உள்ள 165 நலிவுற்ற ஆலயங்களுக்கு ஒருவேளை பூசை நிதியாகத் தலா ரூபாய் ஐயாயிரத்திற்கான காசோலை வழங்கும் விழா 25-8-86 அன்று மயிலை அருள்மிகு கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சென்னைப் பிரிவு துணை ஆணையர் திரு ந. சுவாமிநாதன் எம். ஏ., பி.டி., பி.எல்., அவர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்திருந்தார்.

விழாவிற்கு அறநிலையத்துறை ஆணையர் திரு க. சுந்தரமூர்த்தி, ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமை தாங்கினார். அரசின் எந்தத் திட்டமாயினும் அதை மக்கள் புரிந்து கொண்டு, ஆதரவு நல்கும் போதே அந்தத் திட்டம் சிறப்பினைப்பெறுகிறது என்று குறிப்பிட்ட ஆணையர் அவர்கள் மக்களிடம் ஆலய மேம்பாட்டுத் திட்டத்தை விளம்பரப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இந்த விழா இன்றைக்கு இங்கே நடத்தப்படுகிறது எனக் குறிப்பிட்டார்கள்.

அறநிலையத்துறை ஆலயங்களை மேம்படுத்த என்ன திட்டங்களை நிறைவேற்றி வருகிறது எனப் பலர் கேள்விகளைக் கேட்கிறார்கள். பத்திரிகைகளில் எழுதுகிறார்கள். போஸ்டர்கள் கூடப் போடுகிறார்கள். அறநிலையத்துறை ஆற்றி வரும் ஆலய மேம்பாட்டுப் பணிகளை அவர்களும் தெரிந்து கொள்ளவில்லை. மக்களையும் கூட அவர்கள் இத்தகைய கேள்விகளைக் கேட்டுத் திசை திருப்ப முயல்கிறார்கள் எனக் குறிப்பிட்ட ஆணையர் அவர்கள் ''ஆண்டிற்கு 150 கிராம ஆலயங்கள், திருப்பணிகளுக்காகத் தலா ரூ. 10,000 பெறுகின்றன. 1,300 ஆலயங்கள் ஒருவேளை பூசை நிதியாக தலா ரூ. 5,000 பெறுகின்றன. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஆலயப் பணியாளர்கள் சம்பள பாக்கியாக சுமார் ரூ. 10 இலட்சம் பெறப் போகின்றனர். இம்மூன்று திட்டங்களுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ அவர்களும் ஏழுகோடி ரூபாய்த் திட்டத்தைத் தொடங்கியுள்ளனர். இவை அறநிலையத்துறையின் சிறப்புமிகும் செயற் திட்டங்கள். இந்தத் திட்டங்களில் குறை இருந்தால் கூறுங்கள்; ஆக்கப்பூர்வமான விமர்சனம் செய்யுங்கள்; உங்கள் கருத்துக்களை ஏற்று இந்தத் திட்டங்களை நன்கு ஆய்வு செய்து விரிவு படுத்துவோம்'' எனக் கூறினார்கள்.

ஆணையர் அவர்கள் மேலும் பேசுகையில், திருவையாற்றில் நடைபெற்ற 1,300 ஆலயங்களுக்கு நிதி வழங்கும் விழாவிற்கு மாண்புமிகு

சென்னையில் நடைபெற்ற ஆலய மேம்பாட்டுத் திட்ட நிதி வழங்கும் விழாவிற்கு அறநிலையத்துறையின் அரசுச் செயலர் திரு சுகவனேஸ்வரர் ஐ.ஏ.எஸ்., அவர்களும் ஆணையர் திரு க. சுந்தரமூர்த்தி, ஐ.ஏ.எஸ்., அவர்களும் வருகைதந்த பொழுது எடுக்கப்பட்ட படம்.

அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் வருகை தந்தபொழுது நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியையும் தெரிவித்தார்கள். தஞ்சையில் தமிழ்நாடு உணவு விடுதியில் தங்கியிருந்த மாண்புமிகு அமைச்சரைப் பத்திரிகையாளர்களும் பொது மக்களும் சந்தித்து, ''தஞ்சை அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயத்தில் நாள்தோறும் 4 கால பூசை நடத்த ஆலயத்திற்குப் போதுமான வருமானம் இல்லை. தாங்கள் ஆவனச் செய்ய வேண்டும்'' என்று கேட்க, அவர்களுடைய கோரிக்கையை ஏற்ற அமைச்சர் அவர்கள், 5 இலட்சம் ரூபாய்கள் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு, அதிலிருந்து பெறப்படும் சுமார் 55,000 ரூபாய்கள் 4 கால பூசை நடக்கும் வண்ணம் தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்திற்கு வழங்கப்படும் என அறிவித்ததை ஆணையர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மேலும் சேக்கிழார் பெருமான் அவதரித்த குன்றத்தூரிலும், அவர் திருத்தொண்டர் புராணம் இயற்றிய தில்லையிலும் ஆண்டுதோறும் சேக்கிழார் விழாவைக் கொண்டாடும் வகையில் ரூபாய் 5 லட்சத்தை நிலையான வைப்புத் தொகையாக வைக்கவும், அதேபோல் தில்லை தீட்சிதர்களின் நலனுக்காக ரூபாய் இரண்டு லட்சத்தை நிலையான வைப்புத் தொகையாக வைக்கவும் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ஆவனச் செய்திருப்பதைத் தெரிவித்த ஆணையர் அவர்கள், ''மென்மேலும் அறநிலையத்துறையை மேம்படுத்த நாங்கள் சிந்தித்துச் செயல்பட்டு கொண்டிருக்கிறோம். மக்களும் நல்ல ஒத்துழைப்பைத் தரவேண்டும்'' என்பதாகக் கூறித் தம்முடைய தலைமை உரையை நிறைவு செய்தார்கள்.

இவ்விழாவில் தமிழக அரசின் வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் திரு சுகவனேஸ்வரர், ஐ. ஏ. எஸ்., அவர்கள் பங்கேற்று, சென்னை, செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டங்களைச் சார்ந்த 165 ஆலயங்களுக்குத் தலா ரூ. 5,000 வீதம் மொத்தம் எட்டு இலட்சத்தி இருபத்தையாயிரம் ரூபாயை வழங்கினார்கள். அரசுச் செயலாளர் அவர்கள் தம்முடைய சிறப்புரையில் தெரிவித்த முக்கியமான சில கருத்துக்கள் வருமாறு:

''நான் பல மாநிலங்களையும் சென்றுபார்த்த அளவில் தமிழகத்திற்கு உள்ள ஆலயச் சிறப்பு வேறு எந்த மாநிலத்திற்கும் இல்லை என்றே உறுதியாகச் சொல்லுவேன். உத்திரப்பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் அங்கே காசிவிசுவநாதர் ஆலயம் சிறப்பைப் பெறுகிறது. ராஜஸ்

தானத்தை எடுத்துக் கொண்டால் ஜெய்ப்பூரில் உள்ள பிரம்மாவிற்கான ஆலயம் சிறப்பைப் பெறுகிறது. ஒரிசாவை எடுத்துக் கொண்டால் அங்கே சூரியனார் ஆலயம் சிறப்பைப் பெறுகிறது. இப்படி ஒவ்வொரு மாநிலத்திலும் குறிப்பிடத்தக்க ஒன்றிரண்டு ஆலயங்கள் தான் சிறப்பினைப் பெறுகின்றன. ஆனால் தமிழ்நாட்டில் இருப்பதைப் போன்ற சிறப்பான ஆலயங்கள் இந்தியாவின் மற்ற மாநிலங்களில் இல்லை, ஏன் உலகிலுள்ள மற்ற மற்ற நாடுகளிலும்கூட இல்லை.

தமிழர்களுக்குச் சிறப்பே அவர்கள் கட்டி வைத்துள்ள ஆலயங்கள்தான். சமீபத்தில் கூட கனடா நாட்டில் வாழ்கின்ற நம்முடைய தமிழர்கள் தோரண்டோ என்ற இடத்தில் புதிய ஆலயத்தை எழுப்பியிருக்கிறார்கள். அங்கே வாழும் வெங்கட்டராமன் என்பவர் சிறந்த கம்யூட்டர் எக்ஸ்பெர்ட். அவர் காஞ்சிக்கு வந்து காஞ்சிப் பெரியவரின் ஆசியைப் பெற்றுக் கனடா நாட்டிலே ஆலயத்தை உருவாக்கிக் கும்பாபிஷேகம் நடத்தியுள்ளார். அந்த விழாவிற்கு நம்முடைய ஆணையர் திரு சுந்தரமூர்த்தி அவர்களைக்கூடச் சிறப்பு விருந்தினராக அறநிலையத் துறையின் சார்பிலே அனுப்பி வைத்தோம்.

அப்படி தமிழகத்திற்கு — தமிழர்களுக்கு ஆலயங்களால் தான் சிறப்பு. ஆனால் இன்றைக்கு தமிழகத்திலுள்ள பல ஆலயங்கள் ஒருவேளை பூசைக்குக்கூட வருமானம் இல்லாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எப்படி ஏற்பட்டது இந்த நிலை? முன்பெல்லாம் அரசர்கள் ஆலயங்களில் பூசை நடப்பதற்காக நிலங்களைக் கோயில்களுக்கு எழுதி வைத்துச் சென்றார்கள். காலம் மாறியது. குத்தகையாளர்கள் ஆலய நிலங்களுக்கு செலுத்த வேண்டிய சிறிய அளவிலான குத்தகையைத் தரவும் சுணக்கம் காட்டுகிறார்கள். இயற்கையின் சீற்றம் வேறு; சில ' நேரத்தில் வெள்ளம். பல நேரங்களில் வறட்சி. குத்தகை பாக்கியைச் செலுத்தாத குத்தகைதாரர்களை வெளியேற்ற இயலாமல் சட்டம் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிறது.

அண்மையில் யுனெஸ்கோவைச் சார்ந்த ஆராய்ச்சியாளர் ஒருவர் தஞ்சை மாவட்டத்திலே இருக்கும் ஆலயங்களின் மதிப்பை மட்டும் சுமார் மூவாயிரத்திலிருந்து மூவாயிரத்தைந்நூறு கோடி எனக் கணக்கிட்டுக் கூறியுள்ளார். அப்படியானால் தமிழகம் முழுவதிலுமுள்ள ஆலயங்களின் மதிப்பு சுமார் 10000 கோடி என நாம் மதிப்பிடலாம்.

இன்றைக்கு இவ்வளவு மதிப்புள்ள இந்த ஆலயங்கள் அனைத்திலும் வரக்கூடிய வருட வருமானம் இருபத்திரண்டு கோடிகள் மட்டுமே. 18 ஆம் நூற்றாண்டில் ஆலயங்களின் வருமானம் தமிழகத்தின் மொத்த வருமானத்தில் 15 அல்லது 20 சதவீதமாக விளங்கியிருக்கிறது. ஆனால் இன்றைக்கு ஆலயங்களின் வருமானம் தமிழகத்தின் மொத்த வருமானத்தில் ஒரு சதவீதம் கூட இல்லை. புள்ளி இரண்டு சதவீதம்தான். அதனால் தான் ஆலயங்களுக்கு இந்தத் துன்பம். அதனால் தான் இன்றைக்குப் பல ஆலயங்களில் ஒருவேளை பூசை கூட நடத்த முடியவில்லை. இப்படிப்பட்ட நலிவுற்ற ஆலயங்களை மேம்படுத்த என்ன செய்யலாம் என்பதற்காகத் தமிழக அரசு மிக தீவிரமாகச் சிந்தித்துக் கண்டுபிடித்த திட்டம்தான் இந்த ஆலய மேம்பாட்டுத் திட்டம் எனப்படும் ஏழுகோடித் திட்டம்.

மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இந்தச் சிறப்பான திட்டத்தை 15-8-84. இல் அறிவித்தார்கள். அதற்குப் பிறகு இந்த ஏழு கோடி ரூபாய்களையே அரும்பாடுபட்டு, 5 அல்லது 6 மாத காலத்திற்குப் பிறகுதான் மிக அதிகமான வருமானம் வரக்கூடிய ஆலயங்களிலிருந்து திரட்டி



தமிழக அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர் உயர்திரு சுகவனேஸ்வரர் ஐ.ஏ.எஸ்., அவர்கள், சென்னை, செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டங்களைச் சார்ந்த 165 நலிவுற்ற ஆலயங்களுக்கு ஒருவேளை பூசை நிதியாக தலா ரூபாய் 5000 வழங்குகிறார்கள். அறநிலையத் துறையின் ஆணையர் திரு க. சுந்தரமூர்த்தி ஐ.ஏ.எஸ். அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்குகிறார்கள்.

னோம். திட்டம் அறிவிக்கப்பட்ட 6 மாதத்திற்குப் பிறகுதான் அதாவது 1985 ஆம் ஆண்டு ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில்தான் ஏழு கோடி ரூபாய்களையே திரட்டி முடித்தோம். அப்படி நிதி திரட்ட முடிந்ததே ஒரு மாபெரும் சாதனை தான்.

20-7-85 அன்று தஞ்சையில் அருள்மிகு பிரகதீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற விழாவில் அந்தக் குறுகிய காலத்தில் கிடைத்த வட்டித் தொகையிலிருந்து மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 32 ஆலயங்களுக்கு ஒருவேளை பூசை நிதியாகத் தலா ரூ. 5,000 வழங்கினார்கள். ஆலயப் பணியாளர்களுக்குச் சம்பளபாக்கியாக இருந்த 5,64,856 ரூபாய்களையும் வழங்கினார்கள். இப்போது மறுபடியும் ஒரு ஆண்டு கழித்து அந்த ஏழுகோடி ரூபாயிலிருந்து கிடைத்துள்ள வட்டித் தொகையில் 1,300 ஆலயங்களுக்கு ரூபாய் 65 லட்சங்களை வழங்கி இருக்கிறார்கள். ஆலயப் பணியாளர்களுக்குச் சம்பள பாக்கியாக 9,78,000 ரூபாய்களும் வழங்கி இருக்கிறார்கள். திருவையாற்றிலே நடத்தப்பட்ட அந்த விழாவில் நானும் கூட கலந்து கொண்டேன்.

இப்படியெல்லாம் ஆலயங்களை மேம்படுத்த அரசு முயன்று வரும் முயற்சிகளையே இன்னும் பலர் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தத் திட்டங்களை விவரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் விழாஎடுத்து இன்றைக்கு நிதி வழங்கிக் கொண்டிருக்கிறோம். சென்னை மாவட்டத்தில் 60 ஆலயங்களும், செங்கற்பட்டு மாவட்டத்தில் 60 ஆலயங்களும் வடாற்காடு மாவட்டத்தில் 45 ஆலயங்களும் ஆக மொத்தம் 165 ஆலயங்கள் இன்றைக்கு இங்கே பயன் பெறப் போகின்றன. இப்படி தமிழகம் முழுவதும் உள்ள 1,300 ஆலயங்கள் பயன்பெறப்போகின்றன. இப்படி ஆண்டுதோறும் ஆலயங்கள் பயன் பெறப் போவதோடு, ஆலயப்பணியாளர்களும்தொடர்ந்து பயன்பெறப் போகின்றனர்.

இங்கே வழங்கப்பெறும் நிதியைப் பெற்றுச் செல்லும் ஆலய நிர்வாகிகள் அரசு எந்த நல்ல நோக்கத்திற்காக இந்தத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறதோ அந்த நோக்கத்திற்கு ஒத்துழைப்பு நல்கி, ஆலயங்களை வளர்க்கத் தூய்மையான உணர்வோடு பாடுபடவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்''. அறநிலையத் துறையின் அரசுச் செயலாளர் திரு. சுகவனேஸ்வரர் ஐ,ஏ.எஸ் அவர்கள் இவ்வாறு தம் கருத்துரையை ஆற்றினார்கள்.

இந்தச் சிறப்புமிகு விழாவில்தமிழக அரசின் தமிழ்ப்பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் ஔவை நடராசன் அவர்களும், திருக்குறள் நெறி பரப்பு மைய இயக்குநர் கலைமாமணி திருக்குறளார் அவர்களும் கலந்து கொண்டு ஆலய மேம்பாட்டுத் திட்டத்தைச் சிறப்பித்துப் பேசினார்கள். உதவி ஆணையர் திரு ரா. சுப்பிரமணியன், பி.ஏ., பி.எல்., நன்றி கூற விழா இனிது நிறைவு பெற்றது.

சோழப் பெருவானத்துச் சோதி நிலா

புலவர் நடேச நாராயணன், M.A., B.Ed.,

தஞ்சைமாநகரை விஞ்ச வேறொரு நகரிலை என்று, நெஞ்சம் நிமிர்ந்து சொல்லுமாறு நெடிதுயர் கோபுரத்துடன் நிலைத்து நிற்கின்றது தஞ்சைப் பெரிய கோயில். அக்கோயிலை அமைத்த சோழப் பேரரசன் இராசராசன், தமிழக வரலாற்றிலேயே தனியிடம் பெற்றவன்; தலைசிறந்து விளங்கியவன். சுந்தரசோழன் எனும் இரண்டாம் பராந்தகனுக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்த அவன், தன்னிகரற்ற வீரனாய், தனிப் பெரும் ராஜ தந்திரியாய், இணையற்ற நிர்வாகியாய் 29 ஆண்டுகள் சோழ நாட்டை ஆண்டான்.

நேர்மை வழுவாமல் நீதி பிறழாமல், வீரம் குலையாமல், விவேகம் குறையாமல், அறமும் தரமும் கெடாமல், மறமும் மாண்பும் விடாமல் ஆட்சிசெய்தவன்தான் மாமன்னன் ராஜராஜன்.

போர் முகத்தில் எவர்வரினும் புறங் கொடாத பருவயிரத் தோள் கொண்ட பெரு வீரனாகிய ராஜராஜன், களம் பல கண்டு நாடு பல வென்றவன்.

''காந்தளூர்ச் சாலை கலமறுத்தருளி
வேங்கை நாடும் கங்க பாடியும்
கடிகை பாடியும் நுளம்ப பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
முரண்தொழில் சிங்களர் ஈழ மண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்

அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற பொதுவிருந்து விழாவில் மாண்புமிகு தொழில் அமைச்சர் திருமிகு க. இராசாராம் அவர்கள் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்டது இப்படம்.

முந்நீர் பழந்தீவு பன்னீராயிரமும்
திண்திறல் வெற்றித் தண்தாள் கொண்ட
வன்''

என்று அவன் வென்ற நாடுகளைப் பட்டியல் போட்டுக் காட்டுகின்றது, மெய்கீர்த்தி ஒன்று.

அவனை முதலாம் ராஜ ராஜன் என்று குறிப்பிடுவது, பரம்பரை வரலாற்றுக்கு மட்டுமே பொருந்தும் என்பதில்லை. அவனது சிறப்புமிக்க சாதனைகளுக்கும் அது பொருந்தும்.

ஆம்! அவன் தான் முதன் முதலில் சரித்திர ஆதாரங்களாகத் திகழும் மெய்க் கீர்த்திகளைக், கல்வெட்டில் அமைக்கும் வழக்கத்தைத் தொடங்கிய வரலாற்று நாயகன்.

ஆம்! அவன்தான் முதன் முதலில் தில்லைக் கோயிலில் அடைபட்டுக் கிடந்த தெய்வத் தமிழாகிய மூவர் தேவாரத்தை வெளிக்கொணர்ந்து திருமுறைகளாகத் தொகுத்து அவற்றின் திருப்புகழைத் திக்கெட்டும் பரவச் செய்த சிவபாத சேகரன்.

ஆம்! அவன்தான் முதன் முதலில் கடல் கடந்த ஈழ நாட்டை, கவின் மிகுந்த சோழ நாட்டின் அங்கமாக்கி, ஆட்சி செலுத்திய ஆற்றல் மறவன்.

ஆம்! அவன்தான் முதன்முதலில் நிலத்தை அளந்தும் நாட்டைப் பகுத்தும் நிர்வாகச் சீர் திருத்தம் செய்த மும்முடிச் சோழன்.

இவ்வாறு முக்கியமான சாதனைகளை முதலில் செய்தவன் என்பதால் அவனை முதலாம் ராஜராஜன் என்று குறிப்பிடுவது முழுதும் பொருந்தும் அல்லவா?

வித்தகம் நிரம்பிய அத்தகு மாமன்னன் எல்லாவற்றுக்கும் மேலாக பெரிய விமானம், பெரிய நந்தி, பெரிய சிங்கம் ஆகியவற்றைக் கொண்டு திகழும் தஞ்சைப் பெரிய கோயிலைத் தரணி போற்றுமாறு அரிய வேலைப்பாட்டுடன் அமைத்துத் தந்தான்.

வானுற ஓங்கி வையப் புகழ் பெற்ற அக் கோயில், காலத்தால் அழியாத கலைச் சின்னங்களின் கருவூலமாய்த் திகழ்கின்றது. உலகக் களஞ்சியமான பிரிட்டானிகா நூல், அக் கோயிலை 'இணையற்ற சிற்பங்கள் கொண்ட கோயில்' எனப் போற்றுகின்றது.

சோழப் பெருவானில் சோதி நிலாவாக உலாவந்த கலா மேதைதான் ராஜராஜன் என்பதற்கு இந்த அரிய பெரிய கோயில் உரிய சான்றாக விளங்குகின்றது.

13 அடி உயரமும் 54 அடி சுற்றளவும் கொண்ட லிங்கமும், 20 அடி நீளமும் 12 அடி உயரமும் கொண்ட நந்தியும், 80 டன் எடை கொண்ட ஒரே கல்லால் ஆன விதானமும், அதைத் தாங்கி நிற்கும் 216 அடி கொண்ட விமானமும் மிளிருமாறு நீளத்தில் 793 அடியும் அகலத்தில் 397 அடியும் கொண்ட அப்பெரிய கோயிலைச் சமயத் தலமாகமட்டு மன்றி சமுதாய நிலையமாகவும் திகழச் செய்த புரட்சியாளன், ராஜ ராஜன்.

அத்திருக்கோயிலில் மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்ததோடு, பொது மக்களுக்கு அக் கோயிலின் நிதியிலிருந்து கடன் வழங்கவும் ஆவன செய்து, குடிகளின் நலம் பேணும் முடியரசனாய்த் திகழ்ந்தான். அவனுக்கு நிகராக யாரும் இல்லாததால் அவனை நிகரிலிச்சோழன் என்று நிலவுலகம் போற்றியது.

அக் கோயிலை இந்து சமயம் மறுமலர்ச்சி எய்தும் வகையில் நிலையானதாகவும் நிகரற்றதாகவும் கலையழகு மிக்கதாகவும் ஐந்து ஆண்டுகள் அரும்பாடு பட்டுக் கட்டி முடித்து, அதன் பூசைக்கும் விழாக்களுக்குமாக பல கிராமங்களை மானியமாக அளித்ததோடு வென்ற நாடுகளின் வருவாய்களையும் பக்தியுணர்வோடு அக்கோயிலுக்கே காணிக்கையாக்கினான்.

இராசராசேச்சுரம் எனும் பெயரால் விளங்கும் இந்தப் பெருவுடையார் கோயிலின் மூலவர் பிரகதீஸ்வரர் ஆவார். இக் கோயிலின் திருக்குட நன்னீராட்டு விழாவை ராஜ ராஜனோடு உடனிருந்து நடத்திய கருவூர்த் தேவர், தம் திருவிசைப்பாவில் இத் திருக்கோயிலைப் பதினோரு பாடல்களால் பரவித் தொழுதுள்ளார். ஒன்பதாம் திருமுறையில் இடம் பெற்றுள்ள அப் பாடல்களில் ஒன்று வருமாறு:

''பன்னெடுங் காலம் பணி செய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்நெடுங்கோயில் நெஞ்சு வீற்றிருந்த
எளிமையை என்றும் நான் மறக்கேன்.
மின்னெடும் புருவத்து இளமயில் அனையார்
விலங்கல் செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சி சூழ் தஞ்சை
இராச ராசேச் சுரத் தவர்க்கே''.

— திருவிசைப்பா

நாலுபேர் போன வழி நாமும் போவோம்

''நாலுபேர் போனவழி நாமும் போவோம்'' என்பது நாம் அறிந்து வைத்திருக்கும் பழமொழி., அந்தப் பழமொழியின் உண்மைப் பொருள் என்ன தெரியுமா?

அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் சிவநெறியில் வாழ்ந்து, சிவபெருமானை அடையும் வழியை நமக்குக் காட்டியுள்ளனர். அந்த நால்வரும் சென்ற நல்வழியில் நாமும் செல்ல வேண்டும் என்பதே இப்பழமொழியின் பொருளாகும்.



நஞ்சை கொழிக்கும் தஞ்சை மாநகரை அணி செய்யும் மணி முடியாய்த் திகழும் தஞ்சைப்பெருவுடையார் கோயிலில், ஞானத் திருமுறைகளை கானம் கலந்திசைத்து நாளும் ஓத 48 ஓதுவா மூர்த்திகளையும், ஆடல் வல்லானின் அரங்கத்தில் பக்தி நடம் புரிய பாவையர் 400 பேரையும் இவர்களுக்குத் துணையாக இசைக் கருவி வாசிப்பவர்களையும் நியமித்தான்.

தான் பிறந்த ஐப்பசிச் சதயத் திருநாளில் ஆண்டுதோறும் அருள்மிகு பிரகதீஸ்வரருக்குப் பெருவிழாவாய்த் திருவிழா நடத்தினான்.

திருமுறை கண்ட சோழனாகவும், சிவபாத சேகரனாகவும் விளங்கிய சைவன் ராஜராஜன், தன் ஆட்சி காலத்தில் பிற சமயங்களையும் மதித்துப் போற்றும் சமயப் பொறையுடைய சான்றோனாகவும் விளங்கினான்.

நாகப்பட்டினத்தில் கட்டப்பட்ட பௌத்த விஹாரத்துக்குத் தன் பெயரை வைக்கச் சம்மதித்ததும், ஆனைமங்கலம் எனும் ஊரையே அதற்குப் பள்ளிச் சந்தமாக அளித்ததும், பெங்களூரிலுள்ள மணலூரில் ஜெயங்கொண்ட சோழ விண்ணகரம் எனும் திருமாலுக்குரிய திருக்கோயில் அமைத்ததும், அதற்கு நிவந்தம் அளித்ததும், இன்ன பிறவும் ராஜ ராஜனின் சமயப் பொதுமைக்கு அழியாத சாதனைகளாக நின்று ஆதாரம் காட்டுகின்றன.

அந்த அருள் மொழி வர்மன் தான் சேர பாண்டியரையும் ஒரு சேர வென்று சோழ மண்டலத்தை விரிவு படுத்தி ராஜ ராஜன் எனும் பெரும் பெயர் பெற்றான். அந்தப் புகழ் மணக்கும் புண்ணியப் பெயரே இன்று வரை அவனை அடையாளம் காட்டும் புனிதப் பெயராக நின்று நிலவுகிறது.

ஆட்சி நிர்வாகத்துக்கு மாட்சிமை மிக்கவனாகவும் இந்து சமயத்துக்குப் புதுவேகம் தந்தவனாகவும் கலைப்பணிகளை, கடவுட் பணியாக மாற்றியவனாகவும், புதிய சாதனைகள் பலவற்றுக்குப்பூபாளம் பாடிய முன்னோடியாளனாகவும், வெற்றிபல கண்ட அடலேறாகவும் திகழ்ந்த அவன் கி.பி.985ல் சோழ நாட்டின் அரசனாக முடிசூடி 1014 ஆம் ஆண்டு வரை 29 ஆண்டுகள் இணையற்ற ஆட்சி நடத்தினான்.

யாரை வணங்கினால் என்ன பெறலாம்?

செல்வம் வேண்டுவோர் சூரியனையும், திருமகளையும், முத்தி வேண்டுவோர் சிவ பெருமானையும், உடல் நலம் வேண்டுவோர் விஷ்ணுவையும், வீரம் வேண்டுவோர் பராசக்தியையும், கல்வி வேண்டுவோர் கலைமகளையும் தொழ வேண்டும். முருகபெருமானை வணங்குவோர், எல்லா நலங்களையும் அவன் அருள ஒருசேரப் பெறுகின்றனர். அதனால்தான் அமரர் கண்ணதாசன் அவர்களும்

''கந்தன் காலடியை வணங்கினால்
கடவுளர் அனைவரையும் வணங்குதல்
போலே''

என்று பாடியிருக்கக் காண்கிறோம்.

உ

ஆசை தீரக் கொடுப்பவர்

கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர்

தொல்பொருள் ஆய்வுத்துறை, தஞ்சாவூர்

அருள் பொங்கும் அன்னை அபிராமி திருக்கடவூரிலே கோயில் கொண்டு விளங்குகிறாள். இத்திருத்தலம் மயிலாடுதுறை — தரங்கம்பாடி சாலையில் அமைந்துள்ளது. சிவபெருமானின் அட்டவீரத்தலங்களில் இது சிவபெருமான் காலனைச் சங்கரித்த தலமாகும். இவ்வூருக்கு கிழக்கே சுமார் 2 கி.மீ. தொலைவில் திருக்கடவூர் மயானம் என்ற கோயில் அமைந்துள்ளது. இது காவிரித் தென்கரைத் திருத்தலங்களுள் 48 ஆவது தலமாகும். அப்பர் பெருமான், ஞானசம்பந்தர், சுந்தரர் மூவரும் இத்தலத்தைப் போற்றியுள்ளனர். இத்தலத்தை வில்வாரண்யம், பிரம்மபுரி எனவும் அழைக்கின்றனர்.

பிரம்மன் ஒரு முறை சிவபெருமானால் எரிக்கப்பட்டு மீண்டும் இங்கு உயிர்ப்பிக்கப்பட்டுப் படைப்புத் தொழிலை தொடங்கிய தலமாதலின் இது மயானம் என அழைக்கப்படுகிறது. 'மயானம் என்னும் சுடுகாடும் ஈசனது கோயிலாகும்' என்ற மாணிக்கவாசகரின் வாக்கினை இங்கே நினைவு கொள்வது தக்கதாகும்.

மயானம் என்ற பெயருடைய மூன்று தலங்கள் தேவாரத்திலே கூறப்படுகின்றன. அவை நாலூர் மயானம், கடவூர் மயானம், கச்சி மயானம் ஆகியன. நாலூர், கடவூர் இரண்டும் தஞ்சை மாவட்டத்திலும், கச்சி மயானம் காஞ்சிபுரத்திலும் அமைந்துள்ளது.

கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றியுள்ள திருச்சுற்றில் விநாயகர், முருகன், அவன் தேவியர், கஜலட்சுமி, ஆடவல்லான், பைரவர், சூரியன், சண்டிகேசுவரர், திருமால் ஆகிய தெய்வங்கள் எழுந்தருளியிருப்பதைக் காணலாம். விநாயகர் சந்நிதி மட்டும் கிழக்கு நோக்கிக் காணப்படுகிறது.

கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபம், மகாமண்டபம் என்ற கட்டிடப் பகுதிகளைக் கொண்டு விளங்குகிறது. கருவறையின் தேவகோட்டங்களில் ஹரிஹரன், துர்க்கை, பைரவர், பிரம்மா; லிங்கோத்பவர், தட்சிணாமூர்த்தி, கங்காளமூர்த்தி, பிள்ளையார், கௌரிபிரசாந்த மூர்த்தி ஆகிய தெய்வங்களின் பல்வேறு வடிவங்கள் காணப்படுகின்றன. கருவறை சுவரில் தென்பக்கத்தில்லிங்கவடிவை ஒரு மன்னன் வணங்குவது போன்ற புடைப்பு சிற்பம் ஒன்று காணப்படுகிறது. இம்மன்னன் இக்கோயிலுக்கு பல்வேறு தானமளித்த மூன்றாம் குலோத்துங்க சோழனாக இருக்கலாம். இதுவும் இக்கோயிலுக்கு ஒரு சிறப்பு ஆகும்.

முன் மண்டபத்திலே வில்லேந்திய சிங்கார வேலர் காட்சி தருகிறார். இத்தலத்துக்குரிய சிறப்பு மூர்த்தியாக இவர் வழிபடப் பெறுகிறார். கோயிலின் தென்பால் பிரமதீர்த்தம், பிரமகுண்டம், பிரமசரஸ் என்ற மூன்று தீர்த்தங்கள் உள்ளன. மேலும் இங்கு அசுவதி தீர்த்த குளம் உள்ளது. பங்குனி மாத அசுவதியில் மட்டுமே மக்கள் இத்தீர்த்தத்தில் நீராடுவர். இது இறைவனுடைய அபிடேகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இறைவன் பிரம்மபுரீசுவரர் என அழைக்கப்படுகிறார்.

வெளித் திருச்சுற்றில் கிழக்கு நோக்கி அம்பாள் சந்நிதி உள்ளது. இறைவி 'வாடா முலையாள்' என அழைக்கப்படுகின்றாள். இறைவன் 'திருக்கடவூர்உடையார்' 'திருமயானமுடையார்', 'திருமயான முடைய பெருமாள்' எனவும் இறைவி 'வாடா முலை நாச்சியார்' எனவும் கல்வெட்டுக்களில் அழைக்கப்படுகின்றனர். திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் இறைவனை பெருமான் அடிகள் என்றும், இறைவியை வாடாமுலையாள் எனவும் போற்றுகின்றனர்.

கரியமிடறு முடையார் கடவூர் மயான
மமர்ந்தார்

பெரியவிடை மேல் வருவாரவரெம்
பெருமானடிகளே

—ஞானசம்பந்தர்

கடவூரின் மயானத்தார்
பழைய தம்மடியார் செய்த பாவமும்
பிழையுந் தீர்ப்பர் பெருமானடிகளே
—அப்பர்

வாடாமுலையாள் தன்னோடும் மகிழ்ந்து கானில் வேடுவனாய்க்
கோடார் கேழற் பின்சென்று குறுகி விசயன் தவமகிழ்ந்து
நாடா வண்ணஞ் செருச் செய்து ஆவ நாழி நிலையருள் செய்
பீடார் சடையார் மயானத்துப்பெரிய பெருமானடிகளே
— சுந்தரர்.

இவ்வாறு திருப்பதிகத்தில் குறிப்பிடப்படும் பெயரே கல்வெட்டுக்களிலும் எடுத்தாளப்படுவது ஒரு சிறப்பாகும்.

இக்கோயிலில் வேதத்தை வீணையில் வாசிக்கவும், 'ஸ்ரீருத்ரம்' விண்ணப்பம் செய்யவும் தானமளிக்கப்பட்டதை கல்வெட்டுக்களின் வாயிலாக அறிகிறோம். சிவபெருமானையே உருத்திரன் என்ற சொல் குறிக்கும். சிவபெருமானை வழிபடும் முறையைக் கூறும் உருத்திர மந்திரங்கள் நான்கு வேதங்களில் உள்ளன. இவை உருத்திரம், உருத்திர ஏகாதசனி, ஸ்ரீருத்ரம், மகாருத்ரம், அதிருத்ரம் என ஐந்து வகைப்படும். ஸ்ரீருத்ரத்தை விண்ணப்பம் செய்வதற்கு 'ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவரர்' என்ற குழுவினர் இருந்ததாக திருக்கழுக்குன்றம், திருமணஞ்சேரி, பிரான்மலை, ஆறகளூர், திருவாமாத்தூர், திருநெல்வேலி ஆகிய கோயிற் கல்வெட்டுக்களும், இவ்வாறு விண்ணப்பம் செய்ய அளிக்கப் பெற்ற நிலம் 'ஸ்ரீருத்ராத்யயணப்புறம்' என அழைக்கப்படுகின்றது.



ஆலயத்தின் முன்புறத் தோற்றம்

இக்கோயிலில் 12 கல்வெட்டுக்கள் உள்ளன. திருக்கடவூர், ஜெயங்கொண்ட சோழ வளநாட்டு ஆக்கூர் நாட்டு பிரம்ம தேயம் என அழைக்கப்படுகிறது. இவ்வூரின் அருகில் இருக்கும் ஆக்கூர் என்ற ஊர் 'ராஜேந்திர சிங்க சதுர்வேதி மங்கலம்' என அழைக்கப்படுகிறது. தினந்தோறும் இறைவனுக்குச் செங்கழுநீர் மாலை சாத்துவதற்காகவும், அச்செயலை செய்பவர்களுக்கும் தானமாக நிலங்கள் அளிக்கப்பட்டன. இக்கோயிலுக்காக 'இராசாதிராசன் திருநந்தவனம்' என்ற பூந்தோட்டம் அமைக்கப்பட்டது. இன்னொரு கல்வெட்டில் ஒரு வருடத்தில் ஒவ்வொரு மாதமும் எவ்வளவு தாமரை மலர்கள் அளிக்க வேண்டும் என்பதை குறிப்பிடுவது ஒரு சிறப்பான செய்தியாகும். நந்தவனத்தைக் கண்காணித்துக் கொண்டவர்கள் 'நந்தவன குடிகள்' என அழைக்கப்படுகின்றனர்.

இக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்களைப் பற்றி கூறும் பொழுது 'மண்ணும் மணற்குன்றும்' ஆன நிலத்தை திருத்திக் கொள்ளுமாறு கூறுகிறது. இன்னும் இவ்வூருக்கு அருகில் உள்ள நிலங்கள் கடற்கரை அருகில் இருப்பதால் மணலாகவே காட்சியளிக்கிறது. திருக்கடவூர் கோயிலிலே பணி செய்து வந்த கால வினோத பண்டிதனும் அவனுடைய சுற்றத்தாரும் இக்கோயிலில் திரும்பவும் பணி செய்ய உரிய ஆணை வழங்கியதாக மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டு கூறுகிறது. இதே கல்வெட்டின் பிரதி ஒன்று திருக்கடவூர் கோயிலிலும் காணப்படுகிறது.

இக்கோயிலுக்கு நிலம் முன்பு வழங்கப்பட்டிருந்தது. அந்நிலம் திரிபுவன சக்கரவர்த்திகள் கோனேரின்மைக் கொண்டான் காலத்தில் மீண்டும் கோயிலுக்கு வழங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்பட்ட நிலத்தை

வரியில்லாமல் (இறையிலி) கொள்ள வேண்டும் என வரிக்கூறு செய்வார்களுக்கு (Tax collectors) தெரிவிக்கப்பட்டது. இக்கோயில் கல்வெட்டுக்களில் காணப்படும் ஊர் பெயர்கள் 'திருத்தொண்டத் தொகை மங்கலம்' 'சிவ பாத சேகர மங்கலம்' 'திருநீற்றுச் சோழ மங்கலம்' என சைவ மணங்கமழ்வதாய்த் திகழ்கின்றன.

ஞான சம்பந்தர் பெருமான் தம்பாடலில் இறைவனை 'ஆசைதீரக் கொடுப்பவர்' எனக் குறிக்கிறார். அப்பர் பெருமான், 'அடியார் செய்த பிழை தீர்ப்பார், 'வணங்குவார் இடர் தீர்ப்பார்' எனவும் சுந்தரர் பெருமான் 'இல்லையென்னாது அருள் செய்வார்', எனவும் போற்றுகின்றார்கள். மூவரும் ஒரே கருத்துடன் திருக்கடவூர் மயானத்து இறைவனைப் போற்றுவது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க மற்றும் மூவரும் போற்றிய இத்திருக் கோயிலை, அன்னை அபிராமியை தரிசிக்க செல்லும்பொழுது பக்தர்கள் இங்கும் சென்று தரிசித்து வரலாமே!

விவேகானந்தரின் சிந்தனைகள்

டாக்டர் மின்னூர் சீனிவாசன்
தமிழ்ப்பேராசிரியர், அரசினர் கலைக் கல்லூரி, செங்கற்பட்டு

சுவாமி விவேகானந்தர் பாரதத் திருநாட்டை விழிப்படையச் செய்து சமுதாய மறுமலர்ச்சி காண ஊக்கமளித்துத் தொண்டு புரிந்தவர். மக்களை வாழவிடாத வறுமை மண்டிய காரணத்தால் முதலில் அவர் வறுமைச் சூழலைப் போக்க வேண்டுமென்று துடித்தார். ''வேதாந்தமும் பக்தியும் தனித்துறைகளாய்-சமுதாய நிலையில் என்றும் இருப்பவை; தனிமை, தவம் ஆகியனவே நம் இலக்குகள்'' என்று அருளாளர் நினைத்து வந்த நாளில் விவேகானந்தர் வேதாந்தமும் தத்துவார்த்தமும் பாரதத்தின் மரபுகள்; அவை எல்லோருக்கும் உரியவை என்று கருதினார். அவர் ஒரு சமயம் மதத்தைக் குறித்து பேசுகையில் ''மதம்பற்றி பேசும் போதெல்லாம் நாம் சமுதாயத்தில் எல்லோரையும் உள்ளிட்டுப் பேசியதாகத் தெரியவில்லை'' என்றார். இதனால் கீழ்ப்பட்ட மக்கள் மத நுட்பங்கள் அறிய வேண்டுமென்றோ அம்மதக் கருத்துக்கள் பெற்று உணர்ந்தறிய வேண்டுமென்றோ கருதாது வாழ்ந்த சமுதாய நிலை இருந்ததை அறியலாம். விவேகானந்தர், தத்துவப்பொருளை அனைவர்க்கும் வழங்க விரும்புவோர் முற்பட்டாலும் - பசித்துன்பத்தால் வாடுவோருக்குத் தத்துவங்களைச் சொல்லாதீர்கள். உணவுக்குப் பின்பு மற்ற எண்ணங்களை வழங்குங்கள்'' எனத் தெளிந்துரைத்தார்.

வறுமை பல கோணங்களில் தென்படும். அன்பும் அருளறிவுமில்லாமையும் வறுமையேல் ''இதய வறுமையை அடியோடு வேரடி மண்ணோடு அகற்றுக பெருமானே'' என்று ரவீந்திர நாத்தாகூர் பேசியது அறிந்து கருதப்புகுந்தால் கலாச்சார வறுமையும் வறுமையே என்போம். ''நுண்ணுணர்வின்மை வறுமை'' என்பதே (நாலடியார் காட்டும்) தமிழ் மரபு. விவேகானந்தர் கலாச்சார அறிவும் கல்விப் பயனும் அடையுமுன் மக்கட்குச் செய்ய வேண்டிய முதற்பணியாக வறுமையை விரட்ட முன் செல்ல நம்மை ஊக்கினார்.

நம் ஒவ்வொருவர் செயலிலும் தன்மதிப்பும் மனிதர்க்குப் பொதுவான பண்பும் திகழ வேண்டும்; பெரிதினும் பெரிது விரும்பி உழைக்க வேண்டும். இதனைப் பேசிய விவேகானந்தர் ''விழிப்பாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் தரக்குறைவான செயல்களைச் செய்யாதீர்கள். உங்கள் முன்னோர் ஆன்ம வடிவில் உங்கள் செயல்களைக் கண்டு கண்காணித்து வருகிறார்கள். நம்புங்கள். அவர்கள் நடந்த வழிக்குத் தரமில்லாத அவமதிப்பான பொருந்தாச் செய்கைகளைச் செய்யாதீர்கள்' என்று அதிரும் முரசாக முழங்கினார்.

வறுமை ஒரு நேரிடையான உண்மை. அவ்வுண்மையைப் புறக்கணித்து மற்ற பேருண்மை நுட்பம் பேசுவோர் பேச்சு, சமுதாய நன்மை வழங்க மாட்டாது. ஆகவே, கருமயோகக் கனிவு மிகுந்த விவேகானந்தர், அகற்ற வேண்டிய முதற் பெருந்தீமையென வறுமையைக் கருத்தில் வைத்திருந்தார்.

மனிதப் பிறவிகள் யாவரும் சமம். அவர்கள் உள்ளே நிலவும் இறைமை ஒரே படித்தானது. தடைகளையும் அறியாமையையும் நீக்கி அனைவரும் உள்ளொளி பெறலாம் என்றெண்ணிய விவேகானந்தர் மனிதவுடம்பைக் கோயில், பிரதிஷ்டை செய்யத் தேவையில்லாத கோயில் என்றார். மனிதருள் வாய்த்த கோயில் பற்றி மொழிந்த விவேகானந்தர் தாரணை, தியானம், சமாதி என்னும் படிநிலைகளை நன்குணர்ந்து உணர்த்தினார். வழிபாடு செய்யும் உள்ளம் எத்தனை விரிவுடையதாக இருக்க வேண்டும் என்றெல்லாம் சிந்தித்து அத்வைதக் கொள்கையில் நின்று நம் சித்தத்தின் ஆழமே நம் வழிபாட்டுக்கு விடையளிப்பது என்றுவிவேகானந்தர் தெளிவித்தார். இதய வறுமை அன்பு வறுமை மிகுந்த மாந்தரிடையே வழிபாடு, பற்றிப் பேச வேண்டியது மிகவும் இன்றியமையாததே.

வழிபாட்டைப் பணியாகவே கருதிக் கருமயோகத்தில் நின்று - பிறப்பதைப் பாவமாக அல்லாமல் அமிர்தத்தின் புதல்வர் நாம் என்று கொண்டு பாரத நாட்டுக்குத் தொண்டு செய்யவே கோடிகோடிப் பிறப்பெடுத்திடவும் விழைந்த விவேகானந்தர், பாரதத்தின் தவப் புதல்வரேயாவார். தொண்டுள்ளம் வணங்கும் தெய்வங்கள் ஏழைகளே. ஆதலால் விவேகானந்தர் கடவுளை தரித்திர நாராயணனாக ஏழையரிடையே கண்டு வழிபட வற்புறுத்தினார். இக்கருத்தே காந்தியடிகளால் பின்மொழியப் பட்டதென அறியவேண்டும்.

எண் வகை யோகம்

டாக்டர் பொற்கோ
தமிழ்ப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600005.

(முன் தொடர்ச்சி)

நன்மை தீமை, அறம் மறம், புண்ணியம் பாவம், சரி தவறு முதலான கோட்பாடுகளைப் பற்றியும் தீமைகளிலிருந்து விலகி நன்மையோடு நம்மை இணைத்துக் கொள்வது பற்றியும் முன்னைய பகுதிகளில் பார்த்தோம்.

மனத்தை ஒரு நிலையில் நிறுத்தவும் குறித்த நெறியில் செலுத்தவும் நமக்குத் தெரிந்து விட்டால் உலகில் நமக்கு எந்த அருஞ் செயலும் எளிதாகிவிடும். மனத்தை ஆளுவது இயலாத காரியமல்ல. அதற்கு முறையான பயிற்சிகள் தேவை. நாம் முன்பே குறிப்பிட்டது போல, உடலின் இயக்கமும் மூச்சின் இயக்கமும் ஒழுங்கு பெற்றால் மனம்தானே ஒழுங்கு பெறும். உடலின் இயக்கத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ள ஆதனங்கள் (ஆசனங்கள்) நமக்கு அருமருந்தாக உதவுகின்றன.

உடலைப் பக்குவப்படுத்தி அதன் வழியாக மனத்தையும் பக்குவப்படுத்தி வாழ்க்கையை இனிதாக்கிக் கொள்ள நீங்கள் ஒரு சில ஆசனங்களைக் கற்றுப் பயின்றாலே போதும், எல்லா ஆசனங்களையும் கற்றுக் கொள்ளவேண்டும் என்பதில்லை. ஆசனங்கள் யாருக்கும் எந்தத் தீங்கும் விளைப்பதில்லை. ஆசனங்கள் செய்யும்போது முக்கியமாக மூன்று செய்திகளை நினைவில் கொள்ளுங்கள்.

1. அவசரப் படாதீர்கள்.
2. கொஞ்சங்கூட முரட்டுத்தனம்கூடாது
3. உங்கள் முயற்சியில் படிப்படியாக முன்னேற்றம் இருக்க வேண்டும்.

அன்றாட வாழ்வில் நாம் பல்வேறு வேலைகளைக் கவனிக்க வேண்டியிருக்கும். நமது மனம் அப்படிப்பட்ட சூழலில் அவசர நிலையில் இருக்கும். அவசரமும் படபடப்பும் வளர்ந்து கொண்டே போனால் கவனம் தானே குறைந்து விடும். ஒரு வேலையும் உருப்படியாக நடக்காது, ஆகவே ஆசனம் செய்ய உட்காரும்போதே மனம் அவசரத்திலிருந்து விடுபட வேண்டும். உணவும் உறக்கமும் எவ்வளவு முக்கியம் என்று நமக்குத் தெரியும். உடல், மூச்சு, மனம் ஆகியவற்றைப் பக்குவப்படுத்துகின்ற யோகப் பயிற்சியும் உணவைப் போல் உறக்கத்தைப் போல் அவ்வளவு முக்கியமான ஒன்று.

ஆசனங்களுக்கு நாம் ஒதுக்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்வதில் தவறில்லை. ஆனால் ஆசனங்களைச் செய்யும்போது அவசரப்படக் கூடாது. தொடக்கத்தில் இந்த உணர்வு இருந்தால் போதும். படிப்படியாக ஆசனங்களே நம்மை நிதானமுள்ளவர்களாக மாற்றும்.



இரண்டாவதாகச் சொன்னது முரட்டுத்தனம் கூடாது என்பது. உடலில் வலி எடுக்கிற அளவுக்கு எடுத்த எடுப்பிலேயே கடுமையாக ஆசனங்களை நெடுநேரம் செய்யக்கூடாது. உடலுக்குக் கொஞ்சம் துன்பமாக இருந்தால் கூட அந்தப் பயிற்சியை அப்போதைக்கு அத்தோடு நிறுத்திக் கொண்டு மறுநாள் மீண்டும் அதைச் செய்யலாம். ஆனால் பயிற்சிகளை நாள்தோறும் கொஞ்ச நேரமாவது செய்ய வேண்டும். பயிற்சிகள் இனித் தேவையில்லை என்ற அளவுக்குப் பக்குவம் பெறும்போது நிறுத்திக் கொள்ளலாம்.

இனி மூன்றாவதாக நினைவில், கொள்ள வேண்டியது படிப்படியான முன்னேற்றம். யோகப் பயிற்சியின் நோக்கம் ஆசனங்களில்

தேர்ச்சி பெறுவது மட்டுமல்ல. ஆகவே, ஆசனப் பயிற்சியில் படிப்படியாக முன்னேறினால்தான் அதற்குமேலே உள்ள பயிற்சிகளுக்கு நம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு நாளும் நம் பயிற்சியில் சிறிதளவாவது முன்னேற்றம் இருக்க வேண்டும். நேற்று இந்தப் பயிற்சிகளைச் செய்ததைவிட இன்று செம்மையாகவும் விரைவாகவும் மகிழ்வாகவும் செய்திருக்கிறோம் என்ற எண்ணம் ஏற்படத்தக்க அளவுக்குப் பயிற்சியில் நாள்தோறும் முன்னேற்றம் இருந்தால் போதும்.

நாம் இங்கே சொன்ன மூன்று செய்திகளிலும் கவனமாக இருந்தால் ஆசனப் பயிற்சிகளே அவ்வப்போது நம்மை நெறிப்படுத்தும். அவையே நம்மைச் சரியான வழியில் செலுத்தும். யோக நெறிகளைப் பற்றியும் ஆசனங்களைப் பற்றியும் மிகைப்படுத்திப் பேசிநம்மை மருளவைக்கும் நூல்களையும் நாம் பார்த்திருப்போம்.

பயிற்சிகளில் குறை நேர்ந்தால் அந்தத் தீமை வரும், இந்தக் கேடு வரும் என்று அச்சுறுத்தும் நூல்களையும் நாம் பார்த்திருப்போம். இந்த இருவகை நூல்களுமே பயிற்சியாளர்களுக்குப் பயன்படாது. யோக நெறிகளையும் ஆசனங்களையும் பொறுப்புணர்ச்சியோடு முறையாக அறிமுகப்படுத்தும் நல்ல நூல்களைத் தேடிப் படியுங்கள். பயிற்சியின் போது வழிகாட்டி உதவி செய்ய நல்ல ஆசிரியர் உங்களுக்கு அமைந்தால் மிகவும் நல்லது தான். அப்படி அமையாவிட்டால் நல்ல நூல்கள் தான் உங்களுக்கு உதவ வேண்டும்.

நூல்களையும் ஆசிரியரையும்விட உங்களுக்கு மிக நுட்பமாக எப்போதும் உதவுகிற ஆசிரியர் உங்களுடைய உள்ளுணர்வுதான். பயிற்சிகளைக் கவனமாகச் செய்யுங்கள். உங்கள் உள்ளுணர்வு போதும் என்றால் நிறுத்துங்கள்; இன்னும் சற்று நேரம்பயிற்சியை நீட்டிக்கலாம் என்றால் நீட்டித்துப்பாருங்கள். உங்கள் உள்ளுணர்வு எப்போதும் எங்கும் உங்களுக்கு உறுதுணை. யோக நெறிகளை மேற்கொள்ளும்போது இந்த உண்மை பளிச்சென்று புலப்படும்.

ஆசனங்கள் அல்லது ஆதனம் என்ற சொல்லுக்கு இருக்கை அல்லது இருக்கும்நிலை என்று பொருள். நாம் நம்முடைய உடலை எந்தெந்த நிலையில் இருக்கச் செய்கிறோமோ அதற்கேற்றபடி மனநிலைகளும், சிந்தனைப் போக்கும் அமைகின்றன. உடலை எந்த நிலையில் இருக்கச் செய்தால் எப்படிப்பட்ட பயன் விளையும் என்பதை நன்கு ஆராய்ந்து பார்த்தே நம்முடைய முன்னோர்கள் ஆசனங்களை ஒரு கலையாக வளர்த்து வந்திருக்கிறார்கள்.

ஆசனங்களைப் பற்றி மேலும் ஆராய்ந்து பார்த்து மேலும் புதிய ஆசனங்களைக்கூட அறிந்து உணர்ந்து அந்தக் கலையை வளர்க்கலாம். இது ஒரு புறம் இருக்க, எல்லோரும் பயிலத்தக்க சில ஆசனங்களைப் பற்றி மட்டும் இங்கே பார்ப்போம்.

1. பதுமாசனம் : தரையில் விரித்த விரிப்பின் மேல் இயல்பாக உட்காரவும். இரண்டு கால்களையும் இயல்பாக நீட்டவும். இடது காலின் பாதத்தை வலது தொடையின் பக்கம் கொண்டு வரவும். இடது காலின் குதிக்கால் பகுதி வலது தொடையின் மேல் இருக்கும்படி இடது பாதத்தை வலது தொடைமேல் வைக்கவும்.

இப்படிச் செய்யும்போது வலது காலையும் சற்று மடக்கிக் கொள்ளலாம். வலது கணுக்காலை பிடித்து வலது காலைத் தூக்கி வலது பாதம் இடது தொடைமேல் அமையும்படி வைக்கவும்.

இப்போது இரண்டு கால்களையும் உங்கள் வசதிக்கு ஏற்பக் கொஞ்சம் சரி செய்து கொள்ளலாம். வலது உள்ளங்கையை வலது முழங்கால் மேல் வைத்துக் கொள்ளவும். இடது உள்ளங்கையை இடது முழங்கால்மேல் வைத்துக் கொள்ளவும். நேராக நிமிர்ந்து உட்காரவும். தலையை நேராக வைத்துக்கொண்டு மூக்கின் நுனியைப் பார்க்கவும்.

இப்போது நீங்கள் உங்கள் உடலை அமர்த்தி இருக்கும் இந்த நிலைக்குத்தான் பதுமாசனம் என்று பெயர். அமைதியான மனநிலையோடு உடலை வருத்தாமல் உங்கள் விருப்பம்போல் சில நிமிடங்கள் பதுமாசனத்தில் இருக்கலாம்.

நீங்கள் பதுமாசனத்திலிருந்து எழ விரும்பும் போதும் முறையாகவும், படிப்படியாகவும் ஆசனத்திலிருந்து விடுபட்டு எழவேண்டும். முழ்ங்கால்களின்மேல் வைத்துள்ள கைகளை எடுத்துக்கொள்ளவும். வலது பாதத்தை மெதுவாக இரு கைகளாலும் எடுத்துக் கீழே இறக்கவும். இடது பாதத்தையும் அவ்வாறே இறக்கவும். அதன்பிறகு நீங்கள் இயல்பாக எழுந்து கொள்ளலாம்.

குறிப்பு : ஆசனங்களைப் பற்றியப் படங்களோடு வெளிவந்துள்ள புத்தகங்களைப் படித்துப் பாருங்கள். முதலில் இடது பாதத்தை வலது தொடையின் மேல் வைப்பது நல்லதா? வலது பாதத்தை இடது தொடையின் மேல் வைப்பது நல்லதா? என்பது உங்கள் வசதியைப் பொறுத்தது. ஆசனங்கள் செய்யும்போது உடல் இயக்கங்களுக்கு வசதியான முறையில் குறைந்த அளவு உடை அணிவதே நல்லது.

2. சர்வாங்க ஆசனம் : உடல் உறுப்புகள் எல்லாவற்றுக்கும் பயிற்சி தந்து இந்த ஆசனம் நல்ல பயனை விளைக்கும்.

விரிப்பின் மீது இயல்பாக மல்லாந்து படுக்கவும். காலகளை நேராக நீட்டிக்கொள்ளவும். இரண்டு கைகளையும் உடலை ஒட்டினாற்போல நீட்டிக் கொள்ளவும். இரண்டு கால்களையும் மெதுவாக மேலே உயர்த்தவும். படிப்படியாக இடுப்பு, முதுகு ஆகிய பகுதிகளையும் உயர்த்தவும். இப்படி உயர்த்தும் போது இரண்டு கைகளையும் இடுப்பின் பின் பகுதிக்கு ஆதரவாகப் பயன்படுத்தவும். தலை கழுத்து, தோள்கள், முழங்கை ஆகியவை மட்டும் பூமியில் பொருந்தி இருக்க எஞ்சிய உடல் பகுதியை ஏறக்குறைய நேராக உயர்த்தி நிறுத்தவும். இப்போது இரண்டு கைகளும், உடலின் விலாப்பகுதிகளின் மேல் ஆதரவாகப் பொருந்தி இருக்க வேண்டும். இப்போது உங்கள் உடல் அமைந்திருக்கும் இந்த நிலையினைச் சர்வாங்க ஆசனம் என்பர்.



பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக்கோயில் ஆற்றிவரும் சமுதாயப் பணிகள்

திரு க. பொன்னுசாமி, பி.எஸ்சி., தக்கார்,
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக்கோயில்,
பழநி.

பக்தர்கள் கோரும்வரம் அளிக்கும் சக்திமிக்க தெய்வமான திருமுருகன் உறையும் ஆறுபடை வீடுகளில் மூன்றாவது படைவீடாக விளங்குவது பழநியம் பதியாகும். காசியைவிட பெருமைமிக்கது பழனாபுரி என்பது திருப்புகழ் அருளிய அருணகிரிநாதரின் திருவாக்காகும்.

சமயம் என்பது சமுதாயத்தை வாழ்விப்பது. வாழும் சமுதாயத்தின் மேம்பாட்டைப் பொருத்தே சமயத்திற்கும் பெருமை. இந்தப் பேருண்மைக்கு ஏற்ப, சமுதாயத்தின் வாழ்வியல் மையமாகவும், நமது பாரம்பரியப் பண்பாட்டை வளர்க்கும் பண்ணையாகவும் சிறந்து விளங்கும் பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக்கோயில், பெருமைக்குரிய சமயப் பணிகள் பலவற்றையும் ஆற்றிவருவது போலவே சமுதாயப் பணிகள் ஆற்றுவதிலும் தலைசிறந்து விளங்குகின்றது. இத்திருக்கோயில் ஆற்றிவரும் பல்வேறு சமுதாயப்பணிகளைச் சுருக்கமாக எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமிகள் மேல் பாடப்பட்டுள்ள ''திருப்பள்ளி எழுச்சி'' ஒலியிழையை இராகம் ஒலியிழை நிறுவத்தினர் தயாரித்துள்ளனர். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்கள் ஒலியிழையை வெளியிட, பழநித்தக்கார் திரு க. பொன்னுசாமி B.Sc. அவர்கள் பெற்றுக் கொள்கிறார். உடன் இருப்பர் இராகம் ஒலியிழை அமைப்பின் உரிமையாளர் திரு. பூபதி அவர்கள்.

பழநி ஆலயத்தில் நடைபெற்ற பொதுவிருந்து விழாவில் ஆலயத் தக்கார் திரு. க. பொன்னுசாமி அவர்கள் கலந்துகொண்டபோது எடுக்கப் பட்ட படம்.

குழந்தைகள் காப்பகம் :

அருள்மிகு பட்டத்து விநாயகர் கோயில் அருகே அமைதியான சூழ்நிலையில் 1972-ம் ஆண்டு முதல் இந்தக் காப்பகம் இயங்கி வருகிறது. 3 வயதுக்கு மேல் 5 வயதுக்குள் உள்ள குழந்தைகள் இக்காப்பகத்தில் பகற்பொழுதில், பேணப்பெறுகின்றனர். இவர்களுக்கு நற்பண்பும் அறிவும் வளர்வதற்கான பாடங்களும் கற்பிக்கப் படுகின்றன. இக்குழந்தைகளுக்குக் காலையில் பசும்பாலும், மதியத்தில் சத்துணவும், மாலை நேரத்தில் உயர்தர பிஸ்கோத்துகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. தங்கள் பணியின் காரணமாக, அலுவல் நேரத்தில் குழந்தைகளைத் தம் இல்லத்தில் விட்டுச்செல்ல இயலாத ஏழைப் பெற்றோர்க்கு இக்காப்பகம் பெரிதும் உதவியாக இருக்கிறது.

அன்பு இல்லம் :

பெற்றோர் இல்லாத 196 ஆண் குழந்தைகளும் செவிப்புலன் குறைந்து, வாய்பேச இயலாத 57 மாணவர்களும், ஆதரவற்ற முதியோர்களும் அன்பு இல்லத்தில் இருந்து வருகின்றனர். மாணவர்கள் பல்வேறு வகையான கல்வியும் கற்க வசதி செய்யப்பட்டு, அவர்களுக்குத் தேவையான புத்தகங்கள் ,குறிப்பேடுகள், பேனா, பென்சில் போன்ற பொருட்களும், பள்ளிக்கட்டணம் முதலியனவும் திருக்கோயில் சார்பில் வழங்கப்படுகின்றன. மாணவர்களுக்கும், முதியவர்களுக்கும் உணவு, உடை, மருத்துவ வசதி ஆகியனவும் அளிக்கப் படுகின்றன.

நாதசுரக் கல்லூரி

இக்கல்லூரி 1957-ல் தொடங்கப் பெற்றது. இங்கு 35 மாணவர்களுக்கு நாதசுரப் பயிற்சியும் 25 மாணவர்களுக்கு தவுல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

காதுகேளாதார் பள்ளி :

இப்பள்ளி 1972-ல் தொடங்கப்பெற்றுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இப்பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை உள்ளது. காதுகேளாதார் கல்வித் துறையில் பயிற்சிபெற்ற ஆசிரியைகள் மூலமாக ,ஒலிக்கருவிகள் மற்றும் தகுந்ததுணைக் கருவிகளுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. தையல் வேலை, சித்திர வேலை, உடற்பயிற்சி ஆகியனவும் கற்பிக்கப் பெறுகின்றன. இங்குப் பயிலும் மாணவர்களுக்கு கல்வி, தங்கும் இடம், உணவு, மருத்துவம் ஆகியன திருக்கோயில் சார்பில் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

வேதசிவ ஆகமப் பாடசாலை :

இப்பாடசாலை 1959-ல் தொடங்கப்பட்டது. பூசைகளும், தமிழ் அருச்சனை முறையும் இங்குப் பயிலும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டு ''ஆகமமணி'' என்ற சான்றிதழ் வழங்கப்பெறுகிறது. இங்குப் பயிலும் மாணவர் அனைவருடைய உணவு, உடை, உறைவிடம், மருத்துவச்செலவு முதலியவற்றைத் திருக்கோயிலே ஏற்றுக்கொள்கிறது.

அருள்மிகு பழநியாண்டவர் மெட்ரிகுலேசன் பள்ளி :

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் சார்பில் இயங்கும் பல்வேறு கல்வி நிறுவனங்களில் இது ஒன்று. இந்தப் பள்ளி 1972ல் ஆங்கில மொழி வாயிலாகக் கல்வி பயில விரும்பு



அன்பு இல்லம்

கிறவர்கள் பயன்பெறும் வகையில் தொடக்கப் பள்ளியாகத் தொடங்கப்பட்டு இப்போது 10-ஆம் வகுப்புவரை கற்பிக்கப்படும் மெட்ரிகுலேசன் பள்ளியாக உயர்ந்திருக்கிறது. 'இது மெட்ரிகுலேசன் பள்ளி' என்று அரசால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இங்கு, இருபால் மாணவர்களும் கல்வி பயின்று வருகின்றனர்.

இந்தப் பள்ளியில் மிக நல்லதொரு நூல் நிலையம் உள்ளது. எல்லா வகையாலும் நிறைவானதொரு பள்ளியாக விளங்கும் இந்தப் பள்ளி புதுக்கச்சேரிச் சாலையில் இயங்கிவந்தது. இப்போது அடிவாரத்தில் உள்ள வடசேரி மடம் காலியிடத்தில் கட்டப்பெற்ற மிக விசாலமான நிரந்தரக் கட்டிடத்திற்கு இது மாற்றப்பெற்றுள்ளது.

அருள்மிகு பழநியாண்டவர் கலைக் கல்லூரி :

இக்கல்லூரி, 1963-ல் 160 மாணவர்களோடு தொடங்கப் பெற்றது. அப்போது புகுமுக வகுப்புகள் மட்டுமே இருந்தன. இப்போது, 1049 மாணவர்களுடன் பட்டப் படிப்பும், பட்ட மேற்படிப்பும் பயிற்றுவிக்கும் முதல் நிலை கல்லூரியாக வளர்ந்து பல்கலை மணம் பரப்பி வருகிறது.

பின்வரும் பட்டப் படிப்புகள் (பருவ முறையில்) இங்கே பயிற்றுவிக்கப் பெறுகின்றன.

பி.ஏ. பட்டப் படிப்பு : வரலாறு, பொருளாதாரம், தமிழ் இலக்கியம், இந்தியப் பண்பாடு.
எம்.ஏ. பட்டப் படிப்பு : இந்தியப் பண்பாடு, ஆங்கில இலக்கியம்

பி.எஸ்சி. பட்டப் படிப்பு : கணிதம், இயற்பியல், வேதியல், தாவர இயல், விலங்கியல்.

எம்.எஸ்சி. பட்டப் படிப்பு : விலங்கியல், தாவர இயல், இயற்பியல்.

பி.காம்., பட்டப்படிப்பு

எம்.காம்., பட்டப்படிப்பு

எம்ஃபில் : விலங்கியல், தாவரவியல்.
பி.எச்.டி. : விலங்கியல் (ஆராய்ச்சி மூலம்) தாவரவியல் (ஆராய்ச்சி மூலம்).



நாதஸ்வரக் கலைக்கல்லூரி



காதுகேளாதார் பள்ளி

இவ்வாண்டில் இயற்பியல், தமிழ்த் துறைகளில் முதுகலை பட்ட வகுப்புகள் தொடங்கப்பட்டு உள்ளன.

அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரியில் கற்பிக்கப்படாத பாடங்களுக்கு இக் கல்லூரியில் மாணாக்கியர்களும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். எனவே இது இருபாலரும் கற்கும் கல்லூரியாக விளங்குகிறது.

1965ஆம் ஆண்டில் பழநி திண்டுக்கல் நெடுஞ்சாலையில் சிவகிரிப்பட்டியில் இடும்பன் மலையைப் பின்னணியாகக் கொண்ட பரந்த வெளியில் எழில் மிகு சூழலில் அமைக்கப்பட்ட நிலையான கட்டிடத்தில் இக்கல்லூரி சிறப்பாக இயங்கி வருகிறது.

கல்லூரியில் தாவரவியல் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில், தாவரவியல் கட்டிடம் ஒன்று, 4,50,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது. விலங்கியல் பரிசோதனைக்காக விலங்கியல் கூடம் ஒன்று அண்மையில் கட்டப்பட்டுள்ளது.

இந்தியப் பண்பாட்டுக் கல்விக்காக இந்தியாவிலேயே புதுமுறையாக 1960-ல் தொடங்கப் பெற்ற அருள்மிகு பழநியாண்டவர் இந்தியப் பண்பாட்டுக் கல்லூரி, 1981-ல் இக்கல்லூரியுடன் இணைக்கப்பெற்றது. அதுமுதல், இக்கல்லூரி அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி என்ற பெயருடன் இயங்கி வருகிறது.

கல்லூரி நூலகம் :

கலைக் கல்லூரி நூலகம் பல்வேறு துறைகளைச் சார்ந்த 54,000 நூல்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

கல்லூரி விடுதி :

அண்ணா விடுதி, காமராசர் விடுதி என இரண்டு விடுதிகள் கலைக் கல்லூரியின் அருகில், கல்லூரி வளாகத்திற்குள் அமைந்திருக்கின்றன. இங்கு 350 மாணவர்கள் தங்கிப் பயன்பெறும் வாய்ப்பு உள்ளது.



ஸ்ரீவேதசிவாகம பாடசாலை

அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி.

இக்கல்லூரி 1970-ல் நிறுவப்பெற்றது. பழநியிலிருந்து பொள்ளாச்சி செல்லும் சாலையில் 17 கிலோ மீட்டர் தொலைவில் சின்னக்கலையம் புத்தூரில் கவினுறக் கட்டப்பட்ட அடுக்குமாளிகைக் கட்டடத்தில் 1981 முதல் இயங்கி வருகிறது.

இருபது லட்சம் ரூபாய் செலவில் இதற்கெனக் கட்டப்பட்ட வசதியான விடுதியும் வெளி மாணாக்கியர் வந்து செல்லப் பேருந்தும் உள்ளது.

வளர்ந்து வரும் அறிவியல் வளர்ச்சிக்கேற்ப இளங்கலைப்பட்ட வகுப்புகளில் தமிழ் இலக்கியம், வரலாறு, தாவரவியல், உயிரியல், கணிதம், வேதியியல், ஆங்கில இலக்கியம், வணிகவியல், பௌதிகவியல் ஆகிய துறைகளும், முதுகலைப்பட்டவகுப்புகளில் தமிழ் இலக்கியம், வரலாறு ஆகிய துறைகளும் கற்பிக்கப்படுகின்றன.

மகளிர், புலவர்பட்டம்பெறுவதற்காக 1970 இல் திருக்கோயிலின் சார்பில் தோற்றுவிக்கப்பட்ட அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் செந்தமிழ்க் கல்லூரி இந்தக் கல்லூரியுடன் இணைக்கப் பெற்றுள்ளது.

இக்கல்லூரி நூலகத்தில் 21,000 நூல்கள் உள்ளன. மாத, கிழமை, நாள் இதழ்கள் பலவும் வரவழைக்கப்படுகின்றன.

கல்லூரி சின்னகலையம்புத்தூரில் செயல்படுவதால், போக்குவரத்து வசதிக்காகத் திருக்கோயிலார் மூன்று பேருந்துகளைத் தந்து உதவியுள்ளனர். பாண்டியன் போக்குவரத்துக் கழகம், கல்லூரிக்கும் பழநிக்கும் போய்வர மகளிர் சிறப்புப் பேருந்து ஒன்றினை ஏற்பாடு செய்து கொடுத்திருக்கிறது.

அருள்மிகு பழநியாண்டவர் மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி.

பழநியிலும் பழநியைச் சுற்றியுள்ள சிற்றூர்களிலும் வாழும் மகளிர், தொழிற் கல்வியில் முன்னேற வேண்டும் என்னும் சிறந்த நோக்கத்தோடு திருக்கோயிலின் சார்பில் 1981இல் இந்த மகளிர் பாலிடெக்னிக் கல்லூரி நிறுவப்பட்டது.

தற்போது மேற்குக்கிரி வீதியில் அமைந்துள்ள இக்கல்லூரியில் பட்டம் (டிப்ளமா) பெற அமைப்பியல், மின்னணுவியல், வணிகவியல் ஆகிய பாடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் மேற்படி பாடத் திட்டத்தில் முதல், இரண்டு, மூன்றாம் ஆண்டு வகுப்புகளில் 263 மாணவியர் பயின்று வருகின்றனர். ஒவ்வோராண்டும் 80 மாணவியர் புதிதாகச் சேர்க்கப் பெறுகின்றனர்.

இங்குப் பயிலும் மாணவியர்க்கு வேதியல், இயற்பியல் ஆய்வுக்கூடங்களும், தொழிற்பட்டறையும் ரூ. 3 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது, அமைப்பியல், மின்னணுவியல் ஆய்வுக் கூடங்கள் ரூ. 9.43 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது. ரூ. 3.25 இலட்சம் மதிப்புடைய தட்டுமுட்டுச் சாமான்கள் வாங்கப்பட்டுள்ளன.

தொழில் நுட்பம், கணிதம், அறிவியல் மற்றும் வணிகவியல் ஆகிய துறைகளுக்கு ரூ. 73,000 மதிப்புடைய 2,786 நூல்கள் வாங்கப்பட்டுள்ளன.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்காக நூலக வங்கி ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

மின்னணுவியல் பயிலும் மாணவியருக்காக ரூ. 1,65,000 மதிப்பில் கம்ப்யூட்டர் பொறி ஒன்றும் வாங்கப்பட்டிருக்கிறது.

விடுதி மாணவியர்க்காக திருக்கோயில் நிர்வாகத்தினர் பேருந்து வசதியும் செய்து கொடுத்திருக்கின்றனர்.

அருள்மிகு பழநியாண்டவர் ஆடவர் தொழில்நுட்பக் கல்லூரி :

இக்கல்லூரி திண்டுக்கல் சாலையில் அருள்மிகு பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியின் அருகில் 1982-ல் தொடங்கி வைக்கப் பெற்றுச் சிறப்பாக இயங்கி வருகிறது.



ஆண்கள் தொழில்நுட்பக் கல்லூரி

பதினொரு ஏக்கர் நிலப்பரப்பில் நிலைகொண்டுள்ள இப்பயிலகத்தில் அமைப்பியல், பொறியியல், மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் பிரிவுகளில் பயிற்சியளிக்கப்படுகிறது.

இங்கு நடப்பு ஆண்டில் 532 மாணவர்கள் பயின்று வருகின்றனர். ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் 180 பேர் புதிதாகச் சேர்க்கப்படுகின்றனர்.

இப்பயிலகத்தில் ரூ. 45 ஆயிரம் மதிப்புடைய அமைப்பியல் ஆய்வுக்கூடக் கருவிகளும் ரூ. 93 ஆயிரம் மதிப்புடைய இயந்திரவியல் துறைக் கருவிகளும் மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் துறைக்கு ரூ. 1 லட்சத்து 64 ஆயிரம் மதிப்புடைய ஆய்வுக்கூடக் கருவிகளும் உள்ளன.

இங்குள்ள நூலகத்தில், ரூ. 27 ஆயிரம் மதிப்புடைய நூல்கள் உள்ளன. மேலும் ரூ. 3 லட்சத்து 5 ஆயிரம் மதிப்புடைய மரச்சாமான்களும் உள்ளன.

ஆய்வுக் கூடத்தினை மேலும் விரிவுபடுத்த ரூ. 30 லட்சத்தில் திட்டம் தயாரித்து, வருகிற நிதியாண்டில் செயற்படுத்தத் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பயிலகம் கடந்த 1-4-85 முதல் அரசு மான்யம் பெற்று வருகிறது. தொழில் நுட்பக் கல்வித்துறை, இங்கு நூலக வங்கி ஏற்படுத்த ரூ. 10 ஆயிரம் மான்யம் வழங்கியுள்ளது. ரூ. 9 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் கட்டப்படுகின்றன.

சித்த மருத்துவமனை :

திருக்கோயில் சித்த மருத்துவமனை 8-1-1964 முதல் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு நாளும் ஏறத்தாழ நூற்றைம்பது நோயாளிகள் இலவச சிகிச்சை பெற வருகின்றனர். வருடத்திற்கு 50,000-க்கும் மேற்பட்டோர் குணமடைந்திருக்கிறார்கள்.

சித்த மருத்துவர் ஒருவரும் அவருக்கு உதவியாளர்கள் இருவரும் பணிபுரிகின்றனர்.



மகளிர் தொழில்நுட்பக் கல்லூரி



தவுல் பயிற்சிப் பள்ளி

இருமல், இளைப்பு, தோல்நோய், ஆஸ்துமா, ஈரல் சம்பந்தமான மஞ்சள் காமாலை, ஈரல் வீக்கம், ஈரல் சுருங்குதல், வாதம் போன்ற நோய்களுக்கு, தகுந்த சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

வெளியூர்களிலிருந்தும் பல நோயாளிகள் இம்மருத்துவமனையைத் தேடி வந்து சிகிச்சைபெற்றுச் செல்கின்றனர்.

இன்னும் விரிவாக - நல்ல முறையில் செயல்பட இதற்கெனத் தனிக்கட்டிடம் ஒன்றும் விரைவில் கட்டப்பட இருக்கிறது.

ஆங்கில முறை மருத்துவமனை

திருக்கோயில் நிர்வாகத்தால் 14-2-1972-ல் தொடங்கப்பட்ட இம்மருத்துவமனை தற்சமயம் கோயிலுக்குச் சொந்தமான காரமடை தோட்டத்தில் ஏழு லட்சம் ரூபாய் செலவில் ஆன புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

ஆண், பெண் மருத்துவர்கள், உதவியாளர்கள், செவிலியர்கள், ஆய்வக நுட்பனர், மருந்தாளுநர்கள் இவர்களோடு கண் மருத்துவரும் இங்கு பணிபுரிகின்றனர்.

ஆண்களுக்கும், பெண்களுக்குமாக தனித்தனி வசதிகளோடு 30 படுக்கைகள் உள்ளன.

திருக்கோயில் ஊழியர்களின் குடும்பங்களுக்கும், அதன் நிர்வாகத்தில் செயல்படும் விடுதிகள், நூலகங்கள், பள்ளிகள், கல்லூரிகளின் ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் இங்கு இலவச மருத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது.

வெளியில் இருந்து வருகிற நோயாளிகளுக்கு ஆலோசனைக் கட்டணமாக ஒரு ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படுகின்றது. சிகிச்சைக்கான மருந்து, மாத்திரைகள் தரமான நிறுவனங்களிடமிருந்து வாங்கப்படுகிறது.

நடமாடும் மருத்துவனை

நடமாடும் மருத்துவமனைப் பிரிவு ஒன்று கடந்த பன்னிரண்டு ஆண்டுகாலமாகச் சிறப்பாக

செயல்படுகிறது. இதற்கெனத் தனிமருத்துவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். வாரம் ஒரு முறை



ஆங்கில முறை மருத்துவமனை

பாலசமுத்திரம் கிராமத்தில் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

முதல் உதவி சிகிச்சை முகாம்கள்

திருவிழாக் காலங்களில் முதல் உதவிசிகிச்சை அளிப்பதற்காக, பாத விநாயகர் கோவிலிலும், மலைக்கோவிலிலும் புதிதாகக் கட்டப்பட்டுள்ள முதல் உதவி சிகிச்சை முகாம்களில் முதல் உதவி சிகிச்சைக்குச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருக்கோயில் ஊழியர்கள் கூட்டுறவு பண்டகசாலை

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அலுவலர்கள், பணியாளர்களின் நன்மையை மனத்தில் கொண்டும், திருக்கோயில்களின் உபயோகத்திற்குத் தரமான—நல்ல பொருட்கள் சரிவரக் கிடைக்கவும் அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் ஊழியர்கள் கூட்டுறவு பண்டகசாலை ஆரம்பிக்கப் பெற்று நல்ல முறையில் நடந்து வருகிறது.

நிறைவுரை

பழநி ஆலயம் ஆற்றிவரும் மேற்கண்ட சமுதாயப் பணிகள் மேலும் செம்மை பெற, பக்தர்கள் தங்கள் மேலான ஆலோசனைகளைத் தெரிவித்து உதவ வேண்டுகிறேன்.

பெண்ணரசி கமலவதி

முன்னாளில் சோழ நாட்டை ஆண்ட வேந்தர்களில் ஒருவனே சுபதேவன்என்ற பெயருடையவன். அவன் மனைவியே அருங்குணவதியாகிய கமலவதி.

அக்கமலவதி தில்லைக்கூத்தர் திருவருளால் தாயாகும் பேறுபேற்றாள். குழந்தை பிறக்கப் போகும் நேரத்தில், சோதிடர் ஒருவர் 'ஒரு நாழிகை நேரம் கழித்து இக்குழந்தை பிறக்குமானால் மூன்றுலகத்திலும் இக்குழந்தையின் பெயர் சிறக்கும்'' எனக் கூற அதனைத் தாதிகள் வாயிலாகக் கேட்டறிந்த கமலவதி தன்னை ஒரு நாழிகை நேரத்திற்குத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடுமாறு செய்து, சோதிடர் சொல்லிய நல்ல நேரத்திலேயே குழந்தையைப் பெற்றெடுத்தாள். அவ்வாறு பிறந்த குழந்தை சிவந்த கண்களை உடையதாக இருந்தது. ''என்னுடைய கோ, செங்கணானோ' என்று கேட்டபடி, குழந்தையைப் பார்த்துப் பரவசப்பட்ட கமலவதி, அதே நேரத்தில் இறைவனடி சேர்ந்துவிட்டாள்.

தன்மைந்தனின் வருங்காலப் புகழுக்காகத் தன்னைத் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடச் செய்த, கற்பரசி கமலவதியின் பெருமையை என்னவென்பது! அக்கமலவதி பெற்றெடுத்த கோச்செங்கணாரே சிவபெருமானுக்கு 70க்கும் மேற்பட்ட சிவ ஆலயங்கள் எடுப்பித்துச் சிறப்புகொண்டவர். முன்பிறவியில் சிலந்தியாய் பிறந்து, திருவானைக்கா இறைவர்மேல் மரங்களிலிருந்து சருகுகள் விழா வண்ணம் வலை பின்னித் தொண்டு செய்தவர்.

''ஆனைக்காவில் தாம்முன்னம் அருள்பெற்று
அதனை அறிந்தங்கு
மானைத் தரித்த திருக்கரத்தார் மகிழும்
கோயில் செய்கின்றார்
ஞானச் சார்வாம் வெண்ணாவல் உடனேகூட
நலஞ் சிறக்கப்
பானற் களத்துத் தம்பெருமான் அமரும்
கோயிற் பணிசமைத்தார்''

எனச் கோச்செங்கணாரைப் பாராட்டுவார் சேக்கிழார். இத்தகைய சிறந்த மகனைப் பெறத் தன்னைத் தியாகம் செய்த, கமலவதி, பெண்ணரசி எனில் மறுப்பவர் யார்?

அநபாய சோழனின் இதயக்கனி

டாக்டர் த. அமிர்தலிங்கம்

தெய்வமென அடைகொடுத்துத் தேன்தமிழ்நல் புலவோரில்
துய்யரிரு புலவரைத்தான் துதித்தார்கள் நம்முன்னோர்
உலகமறை வகுத்தவராம் வள்ளுவனார் முதற்புலவர்
''உலகமெலாம்'' என ஈசன் அடிகொடுக்க அற்புதமாய்
அறுபத்து மூவரோடு ஒன்பதின்மர் தனியடியார்
சிறப்புமிகு சரிதமெலாம் விரித்துரைசெய் சேக்கிழாரே
மூவேழு உலகமதும் ஏத்துகின்ற அருட்புலவர்.
நாவேழு கொண்டார்க்கும் ஆகாதே அவர்புகழை
நனியெடுத்துந் கனிதமிழில் வடிப்பதற்கு என்பாரே
யானிங்கே மிகஎளியன் என்னாலே ஆய்விடுமோ?
மாதவத்துச் சிவஞான மாகவிஞன் யானில்லை
ஓதுமறை உமாபதிநல் சிவமவரும் யானில்லை
செப்பரிய செந்தமிழால் சேக்கிழார்மேல் பிள்ளைதமிழ்
செப்பியநல் மீனாட்சி சுந்தரமும் யானில்லை.

திருக்கோயில் ஆசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம் சேக்கிழாரின் சிறப்பினைக் கவிதையில் வடித்து வழங்கும் காட்சி

சிற்றெறும்பு கயிலாய சிகரமிசை ஏறுதற்கு
பற்றுகொண்டு முயலுமாபோல் பக்திகொண்டு முயலுகின்றேன்.
ஞாலத்தின் உயர்ந்ததெது நற்கடலின் உயர்ந்ததெது
சீலமிகும் மலையதனின் சிறப்புமிக உயர்ந்ததெது
அநபாயன் வினவிடவே விழித்தார்கள் அரும்புலவோர்
அதையறியும் விழைவாலே அவன்விட்டான் பனையோலை
இதை எனக்குத் தெளிவிப்பார் இந்நாட்டின் முதலமைச்சர்.
புவிவேந்தன் ஐயமெல்லாம் அறநீங்கி இலையாக
கவிவேந்தர் குன்றைமுனி குறட்பாவால் பதிலிறுத்தார்.
காலத்தால் செய்நன்றி ஞாலத்தின் மிகப்பெரிது
பயன்தூக்கார் செய்உதவி நற்கடலின் மிகப்பெரிது
நல்லொழுக்கம் தனில்மாறா நற்சான்றோர் அவர்புகழே
கல்மலையாம் இமயத்தின் சிகரத்தின் மிகப்பெரிது.
ஓலையினைக் கண்டமன்னன் உவகையினைக் தான்கொண்டான்
சீலமிகும் தொண்டைநாட்டோர் அறிவினையும் தான்உண்டான்.
இருநாட்டை இணைத்தவர்க்கு 'உத்தமசோழபல்லவர்'ாம்
திருநாமம் தந்தேதான் தம்அமைச்சர் எனக்கொண்டான்.
நம்நாட்டு வரலாற்றில் நல்லமைச்சர் தேர்ந்தெடுக்க
அம்புவிஆள் அறவோர்கள் தாம்கொண்ட நல்முறைக்கு
காட்டாக இதுவிளங்கிக் கற்கண்டு சுவைபயக்கும்-இது
பொன்மனத்துச் செம்மலென புவியாண்ட அநபாயன்
நன்மனத்து செம்மலவன் தேர்ந்துகொண்ட வரலாறு.
தம்முயிர்க்கு உறுதிஎண்ணா தலைமகனாம் அருள்மொழிதான்
செம்மைமிக ஆளுகின்றார் திருக்கோயில் காக்கின்றார்
பூசையில்லா ஆலயங்கள் பூசைகொள்ள வைக்கின்றார்
ஆசையில்லா நெஞ்சத்தார் அறத்துறையை மிகவளர்த்து
திருக்கோயில் மணிஒலிக்க திருப்பணிகள் மிகசிறக்க
திருத்தேர்கள் பொன்னாலும் மணியாலும் மிகப்பொலிய
ஆபரணம் அவைகாத்தும் அருட்சிலைகள் அவைகாத்தும்
கோபுரங்கள் மிகஉயர்த்தித் திருக்குளங்கள் தான்தொட்டு
அநபாயர் அவர்இதயக் கனியான அருளாளர்
அநேகம்தான் சாதனைகள் செய்தாரே! என்றாலும்
அவர்மனத்தில் வேதனையும் ஒன்றுண்டு என்னவெனில்
கன்னமொழி காரிகையர் காமமதை மிகச்செப்பும்
சிந்துமணி கற்பதிலே காட்டுகின்ற நாட்டமதை
முந்துமடி யாரவர்கள் மாச்சரிதம் கற்பதிலே
கொள்ளஅவர் வேண்டுமெனக் கொண்டிருந்த மனக்குறையைக்
கொள்கைநெறி மாறாதார் கொட்டிவிட்டார் வேந்தனிடம்.
மதியமைச்சர் அருள்மொழிமேல் மன்னவர்க்கு மதிப்பதிகம்
துதித்தேதான் தம்இதயக் கனியான அமைச்சரவர்
எடுத்துரைத்த நீதியினை மறக்காமல் ஏற்றிட்டான்
அடியார்கள் அவர்சரிதம் தொகுத்துரைக்க வேண்டிட்டான்.
அந்நாளில் இருவோரும் இணைந்திங்கு ஒருமனமாய்
பொன்னாளைக் கண்டிட்டார் பொன்னாட்சி படைத்திட்டார்
எந்நாளும் அவர்புகழ்க்கு அழிவில்லை குறைவில்லை.
விண்ணோரும் மண்ணோரும் மாந்துகின்ற ஓரமுதம்
திருத்தொண்டர் மாக்காதை எனும்அந்த சீரமுதம்.

திருத்தொண்டர் தொகையெனவே சுந்தரரும் பாடிவைக்க
பொருள்விரித்து நம்பியாண்டார் அந்தாதி சூடிவைக்க
முன்னோரின் வழியினிலே வழிநூலாய் அருள்மொழிதான்
பன்னாளாய் பாடுபட்டுப் பலஊரும் சென்றுதேடி
உண்மைக்குத் திண்மையெனக் கிட்டியதாம் குறிப்பெல்லாம்
ஒண்மையுடன் ஆராய்ந்து வரலாற்றுக் கொளியேற்றிப்
பண்சேர்ந்த தேவாரப் பதிகத்துள் நனிமூழ்கி
மூவாத மூவர்களும் சென்றதிருத் தலமெல்லாம்
தாவாத ஆசையினால் தான்கண்டு களிகொண்டு
பக்தியெனும் சுவைசொட்ட சுவைசொட்ட பாப்புனைந்து
அறியாதார் அறிவதற்கு அடியவர்கள் வரலாற்றை
ஆற்றுப்ப டைபோல பாடிவைத்த எம்கோமான்
வரலாற்றுச் சிற்பியதில் எள்ளளவும் ஐயமில்லை.
உலகுய்ய எம்பெருமான் நடமாடும் திருத்தில்லை
விழிகாண பெற்றாலோ பிறவிகளும் வெறுப்பதில்லை



''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்த பிறிவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''
அன்றைக்கு அருளப்பர் பாடிவைத்த திருப்பாட்டு
என்றைக்கும் இனிக்கின்ற எம்ஈசன் அருள்பாட்டு
எல்லையிலா புகழ்கொண்ட தில்லையிலே பெருவிழா
ஏட்டினையும் அதைவடித்த அருண்மொழியாம் வள்ளலையும்
கோட்டுயானை மேலமர்த்தி இவ்வூரை வலம்செய்து
மானமன்னன் அநபாயன் தம்மிரண்டு கையாலும்
போனதிசை எல்லாமும் பொன்கவரி வீசிநின்று
செய்தஅந்தச் சிறப்பெல்லாம் தெய்வமணி சிறப்பன்றோ
பெரியதெது? முன்கேட்ட அநபாயன் அவன்தெளிய
பெரிதுரைத்த கோமானாம் குன்றைமுனி சேக்கிழாரின்
அருமைமிகு காவியத்தை ஆன்றோர்கள் தலைசேர்த்துப்
பெரியதிது எனப்போற்றிப் பெரும்புராணம் என்றாரே!
மூதாட்டி ஔவையவள் பெரிதுரைத்தாள் முருகனிடம்
ஓதுமிந்த பேருலகும் நான்முகனின் படைப்பாகும்
நான்முகனும் நற்றிருமால் 'உந்தியதில் வந்தோன்காண்
மாலவனும் அலைகடலுள் துயில்வதனால் கடல்பெரிது
அக்கடலை அங்கையில் அடக்கியவன் குறுமுனிவோன்
குறுமுனியும் குடமதனில் பிறந்ததனால் மண்பெரிது
மண்தாங்கும் ஆதிசேட மாநாகம் அதுபெரிது
அப்பாம்பும் அன்னைஉமை சிறுவிரலில் மோதிரமே
பேருமையும் பெருஞ்சிவனார் ஓர்பாகத் தொடுக்கமடா
பெருஞ்சிவனில் பெரியோர்காண் பொன்மனத்து அடியாரே.
முருகனுக்குப் பெரிதுரைத்த முத்தமிழ்த்தாய் ஔவையவள்
பெரியரென உரைத்ததனால் அடியார்கள் பெரியாரே.
அடியாரின் புகழ்விரித்த பான்மையினால் அருண்மொழியார்
முடிதாங்கும் திருத்தொண்டர் மாக்காதை மிகப்பெரிதே
பொன்னூலைப் பொன்னூரில் பொன்ஈசன் திருவருளால்
நன்னூலாய் நமக்களித்த தகைமையினால் குன்றைமுனி
அருள்மொழிதான் பெரியாரின் பெரியரெனும் இவ்வவனி.
திருநாமம் ''தொண்டர்சீர் பரவுவார்'' எனஇட்டு
அருள்வேந்தை அநபாயன் களிறேற்றிச் சிறப்பித்தும்
கவரிஇரு கைகொண்டு வீசியதில் வியப்புண்டோ?
வரலாற்றுச் சிற்பியென வாழ்ந்திருந்த சேக்கிழாரும்
வரலாற்றைக் கொடுத்ததுண்டு, வரலாறும் படைத்ததுண்டு.
இளவரசன் தேரேறி வருகையிலே ஆரூரில்
இளங்கன்று தான்குதித்து இடைபுகுந்து மாண்டுவிட
நீதிக்கேட்டுக் தாய்ப்பசுவும் ஆராய்ச்சி மணியடிக்கும்.
வாதாடி வழக்கதனில் பொய்ச்சாட்சி பலகூட்டி
கொலைகாரர் அவர்கூட காந்திமகான் ஆக்கிவிடும்
கலிகாலம் இதில்வாழும் நாமெல்லாம் வியந்திடவே
ஆவுக்காய் தீதறியா தன்மகனைத் தேர்க்காலில்
பாவக்காய் என்வைத்துத் தேய்த்தானே மனுநீதி.
மனுநீதி அவன்சரிதம் எடுத்துவைத்து மண்ணுலகில்
தமிழ்நீதி உயர்ந்தவிதம் சாற்றியவர் அருண்மொழியே.
கொடுத்தஅவர் வரலாற்றில் அநபாயன் புகழ்ச்சோழன்
கோச்செங்காண் சரித்திரத்தைச் சாரமுடன் அறிகின்றோம்
நெல்வேலி வென்றவராம் பாண்டியனார் புகழுண்டு
கற்கோயில் கட்டிவைத்த பல்லவனார் புகழுண்டு
உழவாரத் திருத்தொண்டால் சைவநெறி மிகதழைக்க
உளமார ஈடுபட்ட உத்தமராம் நாவரசர்
என்கடன்கேள் எந்நாளும் பணிசெய்து கிடப்பதுவே
எனப்பாடும் வித்தகரை நீற்றறையில் தான்இட்டும்
நஞ்சிட்டும் கல்லோடு உடன்கட்டிக் கடலதனில்
அஞ்சாது வீசிட்டும் அயலவரும் துன்புறுத்த
சிவனருளால் திருநாவுக் கரசரவர் தாம் உய்ய
சிவசமயம் தான்சேர்ந்து சிவனார்க்கு ஆலயங்கள்
எடுப்பித்துப் புகழ்கொண்ட மகேந்திரனாம் பல்லவனைத்
தொடுப்பித்துச் சிறப்பிக்கும் வரலாறும் இதில்உண்டு.
திருநாவ லூராரின் திருமணத்தைத் தடைப்படுத்த

மறையோதும் வேதியராய் மாஇறைவர் தோன்றிடுவார்.
தண்டுன்றிப் பழுத்தசிவப் பழமாக மணவீட்டில்
என்னடிமை உனக்காமோ இல்லறமே எனக்கேட்டு
சுந்தரரை ஆட்கொள்ளும் சுந்தரமாம் காதையிலே
முந்தையநாள் நீதிமுறை கண்டுமனம் மகிழ்ந்திடுவோம்
''ஆட்சியில் ஆவணத்தின் அன்றிமற் றயலார்தங்கள்
காட்சியில் மூன்றில்ஒன்று காட்டுவாய் என்னமுன்னே
மூட்சியிற் கிழித்தஓலை படிஓலை மூலஓலை
மாட்சியிற்காட்ட வைத்தேன் என்றனன் மாயைவல்லான்''
பரங்கியரின் ஆட்சிக்குப் பிறகேதான் தமிழகத்தில்
நிர்வாக நடைமுறைகள் தழைத்ததென்பார் ஓர்முறைதான்
பன்னிரெண்டாம் திருமுறைநம் காவியத்தைக் கற்பாரேல்
அன்றிருந்த நெறிமுறைகள் இன்றெங்கே எனவியப்பார்.
ஆலயங்கள் அமைந்ததிறம் ஆடரங்கம் அமைந்ததிறம்
நாலுவகை நிலங்களுடன் நானிலமும் பொலிந்தவிதம்
தமிழகத்து ஊர்பெயர்கள் தமிழகத்து நதிப்பெயர்கள்
தமிழகத்து அணிமணிகள் தமிழகத்துத் துணிமணிகள்
அத்தனையும் காட்டுகின்ற வரலாற்றுப் பெட்டகமே
ஆன்றோர்கள் போற்றுகின்ற அருள்மொழியார் புத்தகமே!
நற்சான்றோர் சிலர்வாழ்க்கை வரலாறே சரித்திரமாம்
பொற்சான்றோர் சேக்கிழாரும் தம்வாழ்க்கை சரிதமுடன்
அறுபத்து மூவரவர் சரிதத்தை இணைத்துவைத்துப்
பெருமைக்குப் பொருளாகித் தமிழகத்தை ஏற்றிவைத்தார்
இளங்கோவும் முன்னாளில் புரட்சிமிகச் செய்ததுண்டு
வணிககுல மாந்தரினை நாயகராய் ஆக்கி வைத்தார்
கணிகைகுலம் பிறந்தவளாம் மாதவியை உயர்த்திவைத்தார்
தமிழ்த்தாயின் திருவடியில் சிலம்பணியைப் பூட்டிவைத்தார்
வேளாளர் குலமுதித்த எம்குன்றை மாமுனியோ
வேந்தருடன் வேளாளர் நெசவாளர் மீனவரும்
பாணருடன் மண்பாண்டக் குயவருடன் வண்ணாரும்
ஒப்பெனவே பாடிவைத்த திருத்தொண்டர் மாக்காதை
செப்பிடுவேன் தமிழன்னை தலைமுடிக்கு அலங்காரம்.
ஆண்களுடன் பெண்களுமே சரிநிகராம் சமானமென
அறுபத்து மூவரிலே மூவர்பெண் நாயன்மார்
அமைத்தன்றோ பாடிவைத்தார் அருமைமிகு சேக்கிழாரும்.
சுந்தரரை ஈன்றஅன்னை இசைஞானி நாயன்மார்
சுந்தரத்தைத் துறந்தபேயார் காரைக்கால் நாயன்மார்
மங்கையர்க்கு அரசிசைவ மணிவிளக்கு நாயன்மார்
சங்கையின்றி மற்றடியார் பெருமைக்கும் நங்கைமார்
பங்காகிப் பாங்கான வரலாறும் இசைத்தாரே!
பணிப்பெண்ணார் சந்தனத்தார் பெருமையினை மறந்தாரா?
குணவதியாள் திலகவதி பெருமையதும் மறந்தாரா?
இளையான்கு டிமாறனவர் இல்லத்தாள் மறந்தாரா?
இயற்பகையாம் நாயன்மார் பொற்றுணையை மறந்தாரா?
இறையவரின் ஒருபாதி உமையவளை மறந்தாரா?
இருவிழிகள் இங்காண்பெண் என்பதனை மறந்தாரா?
பெண்டிர்க்குப் பெருமைசெய்த பெரும்புரட்சிக் காவியமே
தொண்டினுக்கும் பெருமைசெய்த பெரும்புரட்சிக் காவியமே
எட்டுதிக்கும் ஏத்துகின்ற திருத்தொண்டர் காவியமே
கொட்டிடுவீர் முரசெடுத்துத் தமிழ்மக்கள் காவியமே.
வரலாற்றில் எளியோரை வாழவைத்த மாணிக்கம்
வரலாற்றில் மங்கையரை போற்றவைத்த ஆணிப்பொன்
குன்றைமுனி அருள்மொழியே குறையில்லா நம்தெய்வம்.
அன்றைக்கு பனிரெண்டாம் நூற்றாண்டில் ஐயரெனத்
தாழ்ந்தோரை மேலோரும் ஏத்தவைத்த கோபுரம்காண்.
வரலாற்றுச் சிற்பியென எம்ஐயன் போற்றுங்கால்
வரலாற்றில் அவர்செய்த இப்புரட்சி போற்றார்யார்?
சிவனுக்கு வைத்தமலர் மோந்ததனால் அரசியினை
சினந்தேதான் செருத்துணையாம் நாயனாரும் மூக்கரிந்தார்
ஈசனுக்கு கொண்டுசென்ற பூக்குடலை சிந்தியதால்
எறிபத்த நாயனாரும் யானையினைக் கொன்றொழித்தார்
திருத்தொண்டர் மாக்காதை சரித்திரத்தைக் கற்போரே!
தீண்டாதார் இல்லையெனத் திருநாளைப் போவாரைக்

கொண்டாடி மகிழ்கின்ற காலத்தில் இனியொருவன்
உண்டுஜாதி என்றாலோ நாமெல்லாம் எறிபத்தர்.
பெண்ணடிமை என்றாலோ நாமெல்லாம் செருத்துணையார்,
குறிப்பாகச் சொல்லுகிறேன் குறிப்பறிவீர் என்பதனால்
மறைப்பாக்கிப் பாதகமும் மங்கலமாய்ப் பாடுவது
சிறப்புமிகு சேக்கிழாரின் தனிப்பாணி அறிவீரே!
அப்பூதி அடிகளவர் திருமகனார் அரவாலே
இப்பூமி நீங்கியதை ''அவன் உதவான்'' என்றன்றோ
செப்புகின்றார் சேக்கிழார்தம் சிறப்புமிகும் காவியத்தில்.
தப்புமன முத்தநாதன் தன்வாளால் மெய்ப்பொருளை
குத்திகொலை செய்ததனைக் கூறுங்கால் நம்முனிவர்
''சித்தமதில் நினைத்தபடி செய்தனன்காண்'' என்பாரே.
அவர்புகழைப் பாடுங்கால் அடியேனும் அவர்வழியே
அவஜாதி உண்டென்றால் நாமெல்லாம் எறிபத்தர்.
பெண்ணிழிவு சொன்னாலோ நாமெல்லாம் செருத்துணையார்.
எனமொழிந்தேன் குறிப்பாக அறிந்தீரோ அதன்பொருளை.
இன்றைக்கு நாளிதழைப் பிரித்தாலே குலைநடுக்கம்
என்றைக்கு வருநமக்குத் துன்பமென கிலிகொடுக்கும்
ஆரணங்கு கற்புபறி போனதென ஒருபக்கம்
காரணமும் ஏழெட்டு காலிகளாம் மறுபக்கம்
முகமுடிக் கொள்ளையர்கள் கொள்ளையென ஒருபக்கம்
நகைகோடி வங்கியிலே போனதென மறுபக்கம்
தடியாலே அடித்தார்கள் குண்டரென ஒருபக்கம்
குடிசையிலே ஏழெட்டுச் சவமென்று மறுபக்கம்
கோயிற்சி லைபோனதெனக் கொட்டை யெழுத் தோர்பக்கம்
வாயிலதைக் காத்தோனும் மாண்டசேதி மறுபக்கம்
மாமியாரும் எரிமூட்ட மருமகளும் மாண்டாளாம்
சாமியாரும் போலியெனச் சிறைவைக்கப் பட்டானாம்
இத்தனையும் தொடர்கதையாய் நடந்துவரும் பொருளென்ன?
பத்திரிகை சேதிகளால் நாடிருண்ட இருளென்ன?
சேக்கிழாரின் காவியத்தில் கொலையுண்டு ஆனாலும்
வாக்கதனால் அதுமறைத்து மங்கலமாய்ப் பாடிடுவார்
சேக்கிழாரின் காவியத்தில் களவுண்டு ஆனாலும்
நோக்கதனால் அதைகுறைத்து மங்கலமாய்ப் பாடிடுவார்
கொண்டவளாம் கற்பரசி கைவிட்டுப் போனவனை
கொண்டுவந்து சேர்ப்பதற்கே அவர்கைகள் எழுதுமம்மா
கற்பனையால் கைகால்கள் முளைக்கவைத்து இன்றிங்கே
கற்பரசி கெடவைத்தே காமத்தை வளர்க்கின்றார்.
அன்றைக்குப் பூம்பாவைக் குயிர்ஊட்டி மகளென்ற
என்ஞான சம்பந்தன் பண்பெங்கே போனதம்மா?
சிங்கடியும் வனப்பகையும் என்மக்கள் எனவுரைத்த
சுந்தரர்தம் வாய்மையதும் இன்றெங்கே உள்ளதம்மா?
வடித்தநல்ல காவியத்தால் வரலாறு படைத்தாரே
கொடியவரை இலையாக்கிக் கொள்கையினைக் கொடுத்தாரே
பண்பற்ற நாளிதழைப் பணத்துக்காய் நடத்துகின்ற
குணக்கேடர், குன்றைமுனி திருநூலைப் படிக்கட்டும்.
பழநிஅருள் தண்டாயு தபாணிசாமி ஆலயத்தில்
அழகுதமிழ் மழைபொழிந்து நம்அமைச்சர் ஆர்.எம்.வீ.
பத்திரிகை யாளர்களின் திருப்பாதம் தான்பணிந்து
எத்துகளைக் குறைப்பதற்கு எள்ளளவு பிரச்சாரம்
செய்திடவே வருகவென செய்தியாளர் தமைஅழைத்தார்
ஆன்மீகம் தழைக்கவந்த பொற்காலம் இதுவெனவே
ஆன்றோர்கள் நம்அமைச்சர் ஆர்.எம்.வீ. புகழ்ந்திடுவார்.
மூன்றாக ஆலயத்தில் முடங்கிநின்ற தங்கத்தேர்
பத்தாக உயர்த்திவைத்த சாதனையார் சாதனையே?
வைப்புநிதி ஐந்துகோடி எனஇருந்த நிலைமாற்றி
முப்பதென அதைஉயர்த்தி வளர்த்ததுயார் சாதனையே?
ஆலயத்தில் ஆண்டவனார் திருமணங்கள் அவற்றோடு
ஏழையர்க்கும் திருமணம்செய் சாதனையார் சாதனையே?
குலமில்லை என்றுரைத்த சேக்கிழாரின் நெறியினிலே
குணம்நிறைந்த சமபந்தி போஜனம்யார் சாதனையே?
விளக்கின்றிப் பூசையின்றி இருண்டநிலை கன்வாக்கி
விழாக்கோடி எடுக்கவைத்த சாதனையார் சாதனையே?

பணியாளர் கல்விக்கும் மருத்துவசி கிட்சைக்கும்
பணம்கொடுத்து உதவுகின்ற சாதனையார் சாதனையே ?
அரிசனரும் அர்ச்சகராய் ஆகவைத்து அவர்வணங்கத்
திருக்கோயில் கட்டிதரும் சாதனையார் சாதனையே ?
ஆத்திகரும் நாத்திகரும் ஒருசேர வாழ்த்துகின்ற
நாவரசர் நற்பணியார் ஆர். எம். வீ. சாதனையே !
சேக்கிழாரும் இன்றிருந்தால் நம்அமைச்சர் அறப்பணியை
வாக்கினாலே புகழ்ந்துஒரு வரலாற்றைப் படைத்திடுவார்
அவர்பிறந்த திருவூரில் அவர்அமைத்த ஆலயத்தில்
அவருக்கே இடமின்றிச் சிலரங்கே தடுத்தார்கள் !
அறுபதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாய் அருண்மொழிக்குச்
சிறுமைசெய்த தவர்ஊரே ; நம்அமைச்சர் முன்நின்று
சேக்கிழாரை எழுந்தருள வைத்தசெயல் சரித்திரமே.
சேக்கிழார்க்கு அரசுவிழா எடுப்பதெல்லாம் சரித்திரமே.
சேக்கிழாரே மறுபடியும் அறத்துறையை வளர்க்கவென்று
செகமதனில் பிறப்பெடுத்து ஆர்.எம்.வீ. ஆனாரோ !
திருநாவுக் கரசரவர் உழவாரப் பணிசெய்ய
அருள்நாவுக் கரசரெங்கள் ஆர். எம். வீ. ஆனாரோ !
திருஞான சம்பந்தர் தமிழ்காத்து மறுபடியும்
அருச்சனையும் தமிழாக்க ஆர் .எம். வீ. ஆனாரோ !
தஞ்சையைமுன் ஆண்டிருந்த இராசராச மாமன்னன்
நஞ்சையெல்லாம் மீட்பதற்கே நம்அமைச்சர் ஆனாரோ !
பம்பரமாய்ச் சுற்றிவந்து திருப்பணிகள் மிகச்செய்ய
பராக்கிரம பாண்டியனார் ஆர். எம். வீ. ஆனாரோ !
சீரங்க கோபுரத்தை விண்முட்ட எழுப்புதற்கு
சீரங்க நாதரவர் ஆர். எம். வீ. ஆனாரோ !
தேடிவந்த செல்வமென நாம்போற்றும் சேக்கிழார்க்குக்
கோட்டமதைக் கட்டிவைத்து நீடூழி வாழியவே!
சேக்கிழாரின் அருட்புகழே அவனியெலாம் தழைத்தோங்க
சேக்கிழாரின் உள்ளம்போல் உலகமெலாம் வாழியவே.



அறநிலையத்துறைச் சாதனைச் சிறப்பிதழ் அற்புதம். மாண்புமிகு ஆர்.எம்.வீ. அவர்களின் மேலச் செவல் ஆலயக் குட முழுக்கு விழா உரை வெகு வெகு அற்புதம். அறநிலையத் துறையின் ஆக்கப்பணிகளைக் குறித்த வாரியார் சுவாமிகள், குன்றக்குடி அடிகள், ஊரன் அடிகள், அறநிலையத்துறை ஆணையர் ஆகியோரின் கட்டுரைகளும் மிகச் சிறப்பாக இருந்தன. தங்கள் பணி மேலும் சிறக்க என் நல்வாழ்த்துக்கள்.

—அ. பாபு, சென்னை-600005.

தங்கத் தேர்கள் விளங்கும் ஆலயங்களின் பட்டியலைக் கண்டேன. ஒன்பது ஆண்டுக் காலத்தில் ஒன்பது தங்கத்தேர்களை உருவாக்கிய மாண்புமிகு அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்களுக்குப் பாராட்டுக்கள்.

—வி. சௌந்தரராஜன், சேலம்-636006.

ஆணையரின் "அறநிலையத் துறைச் சாதனைகள்" பற்றிய கட்டுரை, பயனுள்ள சிறந்த தொகுப்பு. "அறநிலையத்துறை ஆற்றியிருக்கும் பணிகள் மிகப்பல, ஆற்ற வேண்டிய பணிகளும் மிகப்பல" என்ற அடக்கம் பொலிந்த வரிகள் என்னைப் பெரிதும் கவர்ந்தன.

—இரா. கணேசன், ஈரோடு-638006.



தெய்வச் சேக்கிழார் திருநாள் விழாவின் இரண்டாம் நாள் கருத்தரங்கு நிகழ்ச்சிக்குத் திருமுறைக் கலைஞர் பேராசிரியர் வெள்ளை வாரணார் தலைமை தாங்கினார். கலைமாமணி பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தம் சிறப்புரையாற்றினார். டாக்டர் இரா. நாகசாமி, டாக்டர் கு. சுந்திரமூர்த்தி, டாக்டர் கோ. வி. மணிசேகரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.



மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு ஆர்.எம்.வீ. அவர்களும், மாண்புமிகு கைத்தறி அமைச்சர் திருமிகு வி.வி. சுவாமிநாதன் அவர்களும் இந் நிகழ்ச்சியைத் தரையில் அமர்ந்ததிருந்த வாறே முழுதும் இருந்து கேட்டு மகிழ்ந்தது குறிப்பிடத்தக்கது.



தெய்வச் சேக்கிழார் திருநாள் விழாவின் நிறைவு நிகழ்ச்சியாக 6-7-86 அன்று மாலை 5 மணி அளவில் சிதம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு கே. ஆர். கணபதி அவர்கள் தலைமையில் மாபெரும் சமய ஊர் வலம் நடைபெற்றது. யானைகள், கரகம் காவடி, பொய்க்கால் குதிரைகள் புடை சூழ சேக்கிழார் பெருமான் பவனி வர, பள்ளி

மாணவ மாணவியர் 63 நாயன்மார்களின் சீர்மிகுகோலம் தாங்கி ஊர்வலமாக வந்தது சிறப்புமிகும் காட்சி யாகத் திகழ்ந்தது.

மாண்புமிகு அறநிலை யத் துறை அமைச்சர் திருமிகு ஆர். எம். வீ. அவர்களும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமிகு வி. வி. சுவாமிநாதன் அவர்களும் இந்த ஊர் வலத்தைப் பார்வை யிட்டனர்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.